ஓம் விநாயக நமஃ

University of Jaffna Sri Lanka
RECEIVED
1980-?-07
Periodicals Division
Library

# சந்திர தீபம்

## சைவநீதி வளர்த்திடும் தமிழ்ப் பத்திரிகை

தருமத்தைக் காத்து தவத்தைப் பெருக்கி சிவத்தைப் பேணத் திருவருள் கொண்டது.

வெள்ளிக்கிழமை [14-11-80]

ரௌத்திரி வருஷம் ஐப்பசிமாதம் 29-ம் நாள்

இதழ்: 4 சுடர்: 4

சைவ தத்துவ மலர்

# சைவம் என்பது நரகம் புகும் மனிதனை தெய்வமாக்கு கின்ற சமய மாகும்

## உண்மையான சைவ ஒழுக்கங்களே! மனிதனை தெய்வமாக்கு கின்றன

சைவர்கள் என்பவர் அதிகாலையில் எழுதலும் நீராடுவதும் பூப்பறித்தலும் மாலை கட்டுவதும் கடவுளுக்கு சூட்டுவதும் வழிபடுதலும் பின்னர் தத்தமக்குரிய செயல்களைச் செய்வதும்

அந்தநிலையில்

என்றும் தமது கடமைகளை ஒழுங்காகச் செய்வதும் பொய்மை நீக்குதலும் பகை பாராட்டா திருத்தலும் கபடமின்றி நேர்மையுடன் வாழ்தலும்

எல்லா உயிரிடத்தும் அன்பு வைத்தலும் பிறரை வருத்தி தான் வாழ விரும்பாதிருத்தலும் தான் வருந்தி பிறரை வாழ வைத்தலும்

மெது மெதுவாக உலக போகங்களாய பலதிலும் மோகங் கொள்ளா திருத்தலும் அயலும் அறியாத அடக்கமுடன் வாழ்தலும்

உண்ணுமுன் யார்க்கும் ஒரு பிடி அன்னம் பகிர்ந்துண்டு வாழ்தலும் சிவன் அடியார்களைப் பேணி வாழ்தலும் ஏன் செய்ய வேண்டும்? மனிதனாகப் பிறந்த நீ மரணம் என்னும் அவஸ்தை நீங்கித் தெய்வ மாகின்றாய் என்பதையே வேதம் ஆகமம் இவை எடுத்துக் கூறுகின்றன, கடவுள் உன்னிடம் என்ன அநுக்கிரகம் செய்யப் போகிறார் என்றால் உன்னைத் தன்னைப் போல் ஆக்கப் போகின்றார் என்றதே சுருக்கமான கருத்தாகும்;

இப்படியாக கடவுளைப் போல் நீ ஆகவேண்டும் நீ கடவுளாக மாற வேண்டும் என்றால் நீ மேலே கூறிய இந்த சீலங்கள் எல்லாம் உனது வாழ்வில் அமைய வேண்டுமென்றே சைவம் கூறுகிறது; இதனைத் திருநாவுக்கரசர் ஓர் தேவாரத்து வலி உறுத்திப் பேசும் போது மக்களை நோக்கி நீவிர் தெய்வீகத்தை அடைய விரும்பின் இதனைச் செய்யுங்கள் எனக் கூறுகிறார், எப்படி என்றால் தெய்வீகமும் வயலில் நெல் விளைதல் போன்று உம்மிடம் விளைவது ஒன்று! ஆனதினாலே தெய்வத் தன்மைக்கு ஏற்ற வாழ்வை நீவிர் அமையுங்கள்.

நெல் தானாக விளையாது. நெல் விளையும் செயலில் முன் உழுதலும் பின் விதைப்பும் களை பிடுங்கலும் அதன் பின் நீர் பாய்ச்சுதலும் நெல்லின் தகவு கண்டு வேலி இடுதலும் இதனையும் சிறப்புற அமைதல் வேண்டுவது போன்று தெய்வம் என்னும் சித்தம் கொள்வதற்கு வயலைப் பண்படுத்தும் அதே வகை போல் உம் வாழ்வை உண்மை வழி தரும வழி பண் படுத்த வேண்டும் என்கிறார் திருநாவுக்கரசர்

தெய்வ நினைப்பு ஒருவர்க்கு எப்பொழுது பயனாகிறது என்றால் வயலின் நிலைபோல் வந்தால் தான் அது பயன் பெறும் என்பது துணிபு, நினைப்பு பண்புடன் இணைக்கப்பட்டால் அந்த நினைப்பு அவரை தெய்வமாக்கி தெய்வ விளைவு மனிதனில் வருகிறது.

எனவே மனிதன் தேவனாகின்றான் ஒரு தெய்வ நிலை வந்தால் பின்னர் இந்த உலகம் அத்தகையோர் கைவசமாகும்,

இதனாலே கீழே தரப்படும்தேவாரத்து நரியைக் குதிரை செய்வானும் நரகரைத் தேவு செய்வானும் என்று திருநாவுக்கரசர் கூறுகிறார்.

நரி எப்பொழுதும் கள்ளமுடையது மாமிசம் உண்பது சோம்பலுடையது பிற உயிரை தன் கள்ளத் தனத்தால் தான் கொன்று வாழ்வது, வஞ்சனை உடையது இப்படியான ஒரு நிலை நரியால் ஏற்பட்டு நரிக்கும் அதனாலே நரி தெய்வ உலக சுகங்களை அறியாது நரக உலக துயர்களை மட்டுமே அனுபவிக்கிறது.

நரகம் என்றால் என்ன என்பது கேள்வி? நரகம் எங்கிருக்கிறது? இது அடுத்த கேள்வி. நரகம் மனிதனில் தான் உண்டு நரகம் மனிதனில் எப்படி உண்டு? முதல் சோம்பல் ஒரு நரகம்! பகை ஒரு நரகம்! பொய் ஒரு நரகம்! பொறாமை ஒரு நரகம்! புறங்கூறல் ஒரு நரகம்! வஞ்சனை அப்பாடா 28 கோடி நரகம்! அகந்தை ஒரு நரகத்தின் அட்டைப் புழு!!

நரகத்தில் புகுந்து அழுந்தல் என்பது இவையேயாகும்! இறந்த உயிர் இறக்கும் பொழுது அந்த உயிரின் உலக வாழ்வில் எதை மிகுதியாகச் செய்ததோ அதுவே அந்த அந்த உயிரைப் பற்றும் நாம் செய்யும் பழி முதல் அனைத்தும் நம் உயிரை பற்றும்;

உடம்பை சவுக்காரம் போட்டுக் கழுவி குளித்து மினுக்கி பவுடர் பூசி நல்ல சேலை உடுத்து தலைசீவிக் கட்டி உடம்பை நல்லாக வெளிப் பார்வைக்கு வைத்திருந்தாலும் அது உடம்புக்கு அழகைக் கொடுத்தாலும் தனது கணவ... பிறருடன் வைத்துக் கொண்ட உடலுறவு அது உடலுடன் சேராது உயிருடன் பந்தித்து நின்று அடுத்த பிறவியில் அதே செயலை தனது வருவாய்க்குரிய செயலாக்கும்! இது தான் நரகம். இது தான் நரியின் வேலை நரி எவ்வாறு தனது செயலை விட்டிட முடியாது துன்பப்பட்டும் தன் செயலை தொடர்ந்து செய்யுமோ அதே போன்று தான் வாழ்க்கையும் நரியின் குணங்களாகி நரகமாக மாறுகின்றது.

ஆனால் இந்த நரியைக் கடவுள் குதிரையாகச் செய்கின்றானும். எப்படி இருக்கிறது கடவுளின் விளையாட்டு? நரியைக் குதிரையாக்கினால் நரி குதிரையாக மாறின் என்ன பயன்? நரியும் மிருகம்தான் குதிரையும் மிருகம் தான்! ஆனதினாலே நரி குதிரையாகி என்ன பயன் என்பது கேள்வி?

ஆம் குதிரையாக நரி மாறியவுடன் நரி உலகிக்கு பயனாகின்றது. எப்படி குதிரை வண்டி இழுக்கும்! மனிதன் ஏறிச் சவாரி செய்யலாம்! அதோடு, நரிக்கு முன்பிருந்த மாமிச உணவு வேண்டிய தில்லை. நரி குதிரையாக மாறிய பின் தாவர உணவு தான் தின்னும்; குதிரையில் வஞ்சனை இல்லை; நரிக்குற்ற சஞ்சலமில்லை.

முன்பு போல அந்த நரி சுடலையில் ஐயோ அழுகிய செத்த பிணத்தைத் தின்னாது. அந்த நரக நினைப்பு ஒரு போதும் குதிரையாகிய நரிக்கு வராது. உயர்ந்த இலட்சியங்களுடன் சிறந்த சேவை மனப்பாங்கு நரிக்கு வந்து விடும்.

ஆனதினாலே நரியை குதிரையாக்குவது போல் நரகம் புகும் மனிதரை அல்லது நரகச் சயலில் மாட்டிறைச்சி ஆட்டிறைச்சி கோழியிறைச்சி உண்டு கொலை கொடுமை நிறைந்த மனிதரை எங்கடவுள் சிவன் தேவனாக்குகின்றார்.

தேவர் என்பது உலகம் தீங்குறுக படி பாதுகாக்கும் படியானவர்: ஆனதினால் இந்த உண்மைகளை நமது சைவ மக்கள் தெளிந்து கொண்டு மனிதன் தேவனாக ... வதற்கு அல்லது கடவுள் மனிதனை தேவனுக்குவதற்கு மூல காரணமான செயல் எவெனின் உண்மை பேசுதலே! உண்மைக்கு படி ஒழுகுதல் என்று மிகவும் நாம் திடமாக நம்பிக் கொள்ள வேண்டும்;

ஆகையினாலே எந்தகோயில் பேரிலும் ஏமாற்றம் பொய் வஞ்சனை வழக்காடல் முதலியன வேண்டாம். அல்லது இத்தகைய தீங்கினைச் செய்பவருடன் நாம் பழகுதலோ அல்லதுஉறவு கொள்ளுதலோ தகாது. இப்படிச்செய்தல் ஒருவருக்குத் துன்பமாகும்.

தீங்குடைய பொய்மையை பேணும் பிரசாரகர் பிராமணர்கள் செய்யும் பிரசாரத்தை ஆதரித்தோ அல்லது தீங்குடைய பிராமணரின் கையில் அர்ச்சனைத் தட்டம் கொடுத்தோ அல்லது அவர் செய்யும் பூசையில் நின்று நாம் கும்பிட்டோ நடப்பதெல்லாம் நன்மை தராது! இத்தகையபிரசாரகர்களால் நாட்டிற்கு ஏதும் நலமில்லை! சிறப்புமில்லை!.

ஒரு மனிதன் கல்வியால் பெறக் கூடிய சிறப்பு நல் ஒழுக்கமேயாகும்; நல் ஒழுக்கம் தவறிய பின் அவரது கல்வி ஏதும் பிரயோசனம் இல்லை, நல் ஒழுக்கம் ஒருவரில் நிலைப்படுவதற்கு முதலான செயல் வாழ்வில் என்றும் உண்மை பேசுதலே என்பதை மறவாதீர்கள்.

எவருடனுதல் உண்மை பேசிப் பழக வேணடும்; ஒவ்வொருவரும் தாம் தாம் செய்யும் செயலில் உண்மையாக இருக்க வேண்டும். இன்றுள்ள பிராமணர்கள் தத்தமது செயலில் உண்மையாக இருக்கிறார்களில்லை. பெரும்பாலும் பல வஞ்சகச் செயலை கோயில் கருமங்களில் செய்து விட்டு தாம் நரி போல சாமத்திய சாலிகள் என நினைக்கிறார்கள்.

இந்த ஒரு நிலையில் பெரும்பாலான தென்னிந்தியப் பிராமணர் நரியின் பரிவாரமாக அமைந்துள்ளனர்: பெரும்பாலும் பெரிய பெரிய கோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில் குருக்கள் எனச் சொல்லப் பெறும் அவர்கள் இங்கு இலங்கைக்கு வந்து போம் பொழுது அவர்களது செயல் கில நேரங்களில் அருவருக்க தக்கதாக உள்ளது.

திருநாவுக்கரசர் இன்னுமொரு தேவாரத்தில் நரியார் தம் கள்ளத்தால் பக்கான பரிசொழிந்து நாளும் நாளும் தீங்கில் சிக்குவது போன்று நான் ஆகிவிட்டேன் என்று தம்மையே நொந்து கொள்கிறார். எனவே இத்தகைய நிலை எவ்வளவு பாரதூரமானது என்பதை பிராமணர்கள் அறியவேண்டும்.

தில்லை தீட்சதராய் இருந்தாலும் ஒருவர் தமது செயலில் நரியின் வஞ்சனை பொருந்தப் பட்டால் பின் அவரது பூசையால் சிதம்பரத்திற்கு ஏதும் பலனில்லை என்பதை நாம் உணர வேண்டும்.

இன்றுள்ள பிராமணர் கல்வி பயிலாதவராய் இருக்கலாம் ஆனால் நெஞ்சில் வஞ்சனை நீங்கியவராக இருக்க வேண்டும். நெஞ்சில் வஞ்சனை வந்தவுடன் அவர் நரியே ஆகின்றார்' செய்யும் தொழிலில் கபடம் களவு ஏற்படும். காசின் மீது கண்ணும் செய்யும் தொழிலில் கையுமாக இருக்கும் நிலை எமது பிராமண சமுதாயத்தால் அறவே நீங்க வேண்டும்.

பிராமணர்களுக்கு முதற் கல்வியாக தமது தொழிலில் ஏமாற்றம் வராதபடி பாதுகாக்கும் முறையில் கல்வி அமைய வேண்டும். எஞ்சினியர் காரில் வந்தால் அவருக்கொரு மாதிரியும் ஏழை ஒருவர் வந்தால் அவர்க்கொரு மாதிரியுமாக கடமைகளை செய்யக் கூடாது.

அந்தணராக பிறந்து விட்டால் தமக்குரிய ஆறு தொழிலையும் அதற்குரிய நல் நெறியுடன் செய்ய வேண்டும். அல்லாதிருந்தால் மகா மரியாதையாக தான் அந்தணர் அன்று என்று தம்மை உலகறிய பிரகடனப் படுத்தி விட்டு பின்னர் எப்படியும் நடக்கலாம் ஆனால் அவர் அத்துடன் தான் பிறந்த ஊரில் இருக்க கூடாது நாட்டை விட்டு வேறெங்காதல் போக வேண்டும்.

செய்யுந் தொழிலில் ஏமாற்றம் செய்து காசு சம்பாதிக்கும் எந்த ஒரு பிராமணரையும் கண்ணால் காண்பதே தோசமுடையது என்பது சாத்திரம் தெரிவிக்கும் நீதியாகும் ஆனதினாலே இந்த உண்மைகளை ஒரு அந்தணர் உணர்வாராயின் அவர்க்கு பிற கல்வி அவசியமில்லை என்பதை நாம் மீண்டும் வலியுறுத்துகிறோம்.

அந்தணர் பொருள் அவாஞ்சையால் பீடிக்கப்பட்டு அதனையே நோக்கமாகக் கருதி வாழ்வாராயின் அவர் ஒருபோதும் அந்தணராகார் அவர் நரகம் செல்வோரே!

ஆனதினாலே அந்தணர்களிடம் ஒழுக்கக் கேடு மிகின் அவரது தர்மம் குன்றும். அருள் நிலை ஏற்படாது அருள் நிலை ஒருகால்தவறின் பின்னர் எக்காலமும் அதை திரும்ப பெற முடியாது,

உதாரணமாக யோக சுவாமிகளால் உண்டாக்கப்பட்ட சிவ தொண்டன் நிலைய நிர்வாகத்தில் நரியின் செயலே மிகுந்து காணப்படுவது கவலையும் வேதனையும் தரும் செயலாகும்.

அங்கு நிர்வாகத்திலுள்ளோரே சுவாமி கருதிய இலட்சியத்தை கைவிட்டு பொறாமை பகை வஞ்சனை முதலிய பாதகச் செயலால் பீடிக்கப்பட்டு தலைமைப் பதவியில் உள்ளவர்கள் சாட்டுக்கு வாழ்கிறார்கள். ஒரு அருமையான அற நிலையத்தில் அதன் வயது வந்த தலைவர்கள் தாங்களாதல் அந்த நிலையத்தில் பொறுப் புணர்ச்சியுடன் நடவாது சம்பளத்திற்கு ஆளை வைத்து தகாத வழி அவர் நடப்ப அவரை நன் நெறிப்படுத்த வகையறியாது தாங்களும் அவர் செல்லும் வழியில் பங்கு கொள்கின்றனர். வேலைக்காறன் செய்யும் பழியில் வேலைக்காறனை வைத்திருப்போர் பங்கு பெறாது இருக்க முடியாது.

இந்த வார்த்தையை நான் இங்கு குறிப்பிட வேண்டிய அவசியமில்லையாயினும் சிவ தொண்டன் நிலையத்தின் நலன் கருதி நாம் இதனைக் குறிப்பிடுகின்றோம், எமக்கு அவர்களின் தவறுகளை எடுத்துக் காட்ட வேண்டிய அவசியமில்லை என்பதும் அவர் மீது நமக்கு குரோதம் இல்லை என்பதையும் சிவ தொண்டன் உணருமாயின் அது அவர்களின் நிலைய அருள் வளர்ச்சிக்கு ஏற்றதாகும்.

எனவே நமது சமயப் பெரியோர் பிரசாரகர்கள் அனைவரும் இந்த தேவாரத்தின் உண்மையை உணர்ந்து தம் வாழ்க்கையை ஒப்பிட்டு நோக்கி எது சரி எனத் தெளிவார்களாக.

# பெண்ணல்ல! பொன்னல்ல! மண்ணல்ல! ஆனால்! மரணத்தை வெல்லும் பெரும் பேறே சிவ வழிபாட்டின் இலட்சியம்!

திருச்சிற்றம்பலம்

-- திருவாரூர் பண் -- காந்தாரம் [ 4ம் திருமுறை ]

பாடிளம் பூதத்தினானும் பவளச் செவ்வாய் வண்ணத் தானும்
கூடிள மென் முலை யாளைக் கூடிய கோலத்தினானும்
ஓடிள வெண் பிறை யானும் ஒளிதிகழ் சூலத்தினானும்
ஆடிளம் பாம்பசைத் தானும் ஆரூரமர்ந்த அம்மானே.

பெருமையிற் சிறந்த என்றும் இளமையுடைய பூதங்களை படையாக உடையவனும் பவளம் போன்ற செவ்வாய் உடைய வடிவைக் கொண்டவனும் இளமை என்றும் கூடிய மென்மையான முலையுடைய உமையம்மையாரைக் கூடிக் கொண்ட கோலமுடையவனும் கலைகள் தேய்தலால் இளம்பிறையாகி ஓடிச் சென்று அபயம் புகுந்த வெள்ளைப் பிறையை உடையவனும் ஒளி திகழும் சூலப் படையை உடையவனும் ஆடுகின்ற இளம் நாக பாம்பை ஆட்டி அசைக்கிறவனும் ஆன கடவுள் திருவாரூர் கோயிலில் அமர்ந்துள்ளான்.

பாடு இளம் பூதம் என்றது பாடும் பூதங்கள் எனவும் கொள்ளலாம் ஆனால் பூதங்கள் பாடுவனவாயினும் அவை என்றும் இளமை உடையன. பாடு என்பது பெருமை எனக் கொள்ளின் அதுவே சாலவும் பொருந்தும், பூதங்கள் என்பதை உருத்திரராகவும் கொள்ளலாம் பூதங்கள் என்றும் இளமையுடையன. உதாரணமாக பஞ்ச பூதங்களாகும் மண் நீர் நெருப்பு காற்று வானம் இவையாவுமே என்றும் இளமையுடையன மண் மூப்பதில்லை நீர் மூப்பதில்லை இப்படியே ஏனையவும் இளமை கொண்டன.

சிவனது எழில் பவளம் போன்றது உமையம்மையாரின் முலை என்றும் இளமை உடையது. அது ஒருக்காலும் மூப்பதில்லை. ஆனதினாலே இளமை கூடிய தென்பதை கூடிளம் மென் முலையாள் என்றார்.

மென் முலையுடைய பிராட்டியைக் கூடியும் அம்முலை என்றுமே தீண்டப்படாது அல்லது உண்ணப் பெறாதது அதனாலே அம்மையின் பெயர் உண்ணாமுலை என்பதாகும்,

இவைகள் யாவும் ஞான தத்துவங்கள் சத்தியும் சிவமும் ஒன்றாகி என்றும் இளமை உடையதாகி இருக்கின்றன என்பது ஞானிகள் துணிபு.

ஓடிள வெண் பிறை என்றது தக்கன் சாபத்தால் கலை தேய்ந்தது குறித்தவாறாயிற்று. சந்திரன் கலைகள் தேய்ந்தும் என்றும் குன்றாது ஒரு கலையுடன் இருப்பதைச் சூடிய எம் கடவுள் சிவன்,

ஆடிளம் பாம்பு என்றது இளமை உடையதாகி ஆடிய வண்ணம் உள்ளது. இவைகள் தச வாயுக்கள் எனப்படும். இவைகள் யாவும் பூரணமான ஆன்மாவிடத்து இருப்பன. ஆன்மா என்றும் இளமையுடன் விளங்குவது என்பது ஞானிகள் துணிபு,

நரியை குதிரைசெய் வானும் நரகரைத் தேவுசெய் வானும்
விரதங் கொண்டாடவல் லானும் விச்சின்றி நாறுசெய் வானும்
முரசதிர்ந் தானைமுன் னோட முன்பணிந் தன்பர்கள் ஏத்த
அரவரைச் சாத்திநின் றானும் ஆரூ ரமர்ந்தஅம் மானே.

காட்டில் உள்ள நரிகளை குதிரையாக செய்கிறவனும் நரக உலகம் புகும் மனிதனை தேவராக மாற்றுகிறவனும் உலகம் உய்வதையே திருநோக்கான விரதங் கொண்டு உலகெங்கும் நிறைந்து நின்று ஆடுகிறவனும் வித்து இல்லாமல் பயிர் செய்பவனும் முரசப்பறை முளங்க அதை ஏற்றி செல்கின்ற யானை முன்னதாகச் செல்ல திரு முன்னாக பணிந்து அன்பர்கள் போற்ற திருவரையிலே பாம்பை அணிந்து நின்றவனும் திருவாரூரமர்ந்த எம் கடவுளாவான்,

காட்டில் உள்ள நரியை குதிரை செய்தது மாணிக்கவாசகருக்கு என்றாலும் அது தத்துவரீதியாக உணரப் பெறின் வஞ்சனை கொண்ட சித்தம் வஞ்சனை அற்ற கிருபை உள்ள நிலையாக மாறுவது. இதுவே நரியை குதிரை செய்ததாகும். மாணிக்கவாசருக்கு மட்டுமாக அது செய்யப்படவில்லை தனது அடியாரர்க்கு அருள் புரியும் தகவால் அன்றும் இன்றும் என்றுமே நரிகள் குதிரையாகின்றன

இங்கு சர்த்திர ரீதியாக நாம் இதை கொள்ளின் இது சித்தாடல் ஒன்றாக கருதப்படும், ஆனால் சித்து என்பது இறைவனுடையதல்ல பரான்மா சடப் பொருளல்ல அறிவும் அறியாமையும் கடந்து நிற்பது. ஆகவே இந்த பரான்மன் என்றும் செய்யும் திருவிளையாடல் நரியை குதிரை ஆக்குவதாகும்.

இதனை நாம் உணர்தல் வேண்டும் சரித்திரத்தை மட்டும் சொல்லி கேட்டு போவதல்ல. பரமான்மாவினுடைய திருவிளையாடல் எங்குமே நிறைந்து நிற்கின்றது.

மதுரையிலே தான் நரியை குதிரை செய்வதல்ல மஸ்கோவிலும் நரி குதிரை ஆக்கப்பெறும் என்பதை எல்லா சைவ மக்களும் உணர வேண்டும் ஆதி அந்தம் இல்லாத ஆன்மாவே சிவம். நரி குதிரையானபின் ஆதி அந்தம் இல்லாத ஆன்மா சிவம் என்பது தெளிவாகும்'

ஆனதினாலே அடுத்த வரிசையில் நரகரை தேவு செய்வான் என்றார். வஞ்சனை யுடையானுடைய செயலை நோக்கும் போது உண்மையில் நரகமாகவே இருக்கிறது. நரி குதிரையாக மாறியபின் தான் நரியினுடைய நிலை குதிரைக்கு விளங்கும், ஆகையினால் நரி செத்த பிணத்தை தின்ற அது குதிரையாக மாறிய பின் ஐயோ எப்படியான பழி செய்தேன் என தெரியும். அடுத்து நரி பயந்து பயந்து இருப்பது ஆகும். குதிரை அப்படி அல்ல எதற்கும் அஞ்சாது.

உலகம் எல்லாம் உய்வதே பரமனாகிய சிவத்தினுடைய திருவிளையாடலாகும், நாம் ஒரு கருமத்தை செய்யும் போது ஓர் விரதமாக இருக்கிறோம், அதே போல் கடவுளுடைய விரதமும் தன்னைப்போல பிற உயிரையும் ஆக்குவதே ஆகும், அறியாமையில் கிடக்கும் எல்லா உயிரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் அதாவது நரியாக இருக்கும் உயிரை தன்னைப் போல ஆக்கிவிடுவது தான் சிவனுடைய ஆடல். இதை மாணிக்கவாசகர் யாவரும் பெற உறும் சிவன் என்று சொல்கிறார்.

இந்த உலகில் வாழும் எந்த உயிரும் என்றோ ஒரு நாள் உண்மைப் பொருளை உணரப் போகிறது. உண்மை உணர்ந்து தெளிந்த பின் தான் சாதுவாகவே இருக்கும். பின் அதற்கு சஞ்சலமில்லை, இது திருவாரூர் இருந்த கடவுளினுடைய திரு விளையாடல் என்று சொல்கிறார்.

வித்து இல்லாமல் பயிர் விளைவு செய்வானும் என்பது உலகில் நெற் பயிருக்கு வித்து வேண்டும். ஆனால் முன்னமே தோன்றிய வித்து சிவத்தினுடையது தான் என்றது தான் பொருள். இந்த தத்துவத்தை நன்றாக உணர்ந்தால் உயிர் வர்கத்திடத்தில் சிவன் தம்மை விதைப்பதில்லை. உயிரை சிவம் தன்னைப் போல் ஆக்கி விடுகிறது. இதை வேட்டைவாலி இலையான்கள் புழுவை தான் ஆக்குவது போல என்று பெரியோர் சொல்வார்கள். விச்சின்றி என்பது வித்தை இல்லாமல் என்பதும் பொருள்.

திருவாரூர் சாமி எழுந்தருளி வந்தால் முரசப்பறை சுமக்கும் யானைகள் முன்னாக வரிசையாகச் செல்லும். அன்பர்கள் முன்பாக பணிந்து போற்றுவார்கள், உண்மையில் இது ஒரு ஆனந்தமயமான திருவாரூரில் அன்றிருந்த நிலையை திருநாவுகரசர் சொல்கிறார்;

சம்பந்தர் இதற்கு மேலாக திருவாரூரரை சென்று வலம் வந்து தரிசிப்பார் மரணத்தை வெல்வார் என்று சொல்கிறார்.

இவற்றையெல்லாம் சற்று சைவ மக்களே சிந்தித்துப் பாருங்கள்.

**நீறுமெய் பூசவல் லானும் நினைப்பவர் நெஞ்சத்து ளானும்**
**ஏறுகந் தேறவல் லானும் எரிபுரை மேனியி னானும்**
**நாறு கரந்தையி னானும் நான்மறைக் கண்டத்தி னானும்**
**ஆறு சடைக்கரந் தானும் ஆரு ரமர்ந்தஅம் மானே.**

திருநீறு திருமேனியில் பூச வல்லமை உடையவனும், அவனை நினைக்கின்ற நினைவுக்கு நினைவாகி நெஞ்சத்துள் இருப்பவனும், இடபம் ஏறுதலை மகிழ்ந்து ஏறிக்கொள்பவனும், நெருப்பை ஒத்த செம்மை மேனி உடையவனும், வாசமுடைய கொன்றை மலர் மாலையினனும், நான்கு வேதங்களும் ஓதுன்ற கண்டத்தை உடையவனும், பெருகிய கங்கை ஆற்றைச் சுருக்கி தமது திருச்சடையில் மறைத்து வைத்தவனும் திருவாரூர் அமர்ந்த கடவுளாகிய சிவமூர்த்தி ஆவான்.

எல்லாரிடமும் இருந்து திருநீறு பூசுகின்றவன் சிவனே. இதனாலே செம்மை வெண்ணீற்று ஒருமை என்று திருநீறு பூசப்பட்ட வடிவம் எல்லாம் சிவனாகவே பெரியோர் காண்பர். திருநீறு பூசியவன் சிவனுனபடியால் திருநீறு அணியும் சிந்தை சிவமயமானது.

நினைக்கின்ற நினைப்புக் கெல்லாம் மூலாதாரம் கடவுள், கடவுள் இல்லாமல் யாரும் நினைக்க முடியாது. சிவனை நினைப்பது சிவனே ஆகுவது என்பது பொருள்.

இடபம் ஏறு ல் பலராலும் விரும்பத் தகாது என்றாலும் களங்கமற்ற ஒரு நிலை இடபத்தை குறித்தால் இடபல் ஏறுதல் உவப்பாயிற்ற. உலகில் கபடமற்ற வாழ்வை மேற்கொள்ளுவதை யாரும் இலகுவில் எவரும் விரும்பமாட்டார்கள். இடபம் என்பது இங்கு தருமத்தை குறிக்கிறது.

சிவன் செவ்வானம் போன்ற சிவந்த வடிவுடையவன் ஆனதினாலே எரிபுரைமேனியன் என்றார்! கொன்றைமலர் பொன்போலும் வடிவம் உடையது: கலங்கமற்றது. அது சிவத்தால் விரும்பம்படுவது. சிவன் சதாவேதத்தை ஓதிக்கொண்டிருக்கிறார்: இதை பெரியோர்கள் உணரவார்கள் சித்தத்தை சிவன் பால்வைத்து தியானம் செய்யும் பெரியோர்க்கு உள்ளத்தினுள்ளே சிவனுடைய வேத ஓசைகள் கேட்கப்படுப ஆதலினாலே நான்கு வேதமும் ஓதுகின்ற கண்டத்தை உடையவன் என்றார்'

கங்காநதி உலகை அழிவு செய்யத் தோன்றி எங்கும் பரந்தபோது அதைச் சுருக்கி அதன் பெருக்கத்தால் உலகம் அழியுறுவதை பாது காத்தவன் சிவன் ஒருவனே என்றதால் ஆறுசடைக்கரந்தவன் என்றார,

**கொம்பு நல் வேனி லவனைக் குழைய முறுவல்செய் தானும்**
**செம்புனல் கொண்டெயில் மூன்றுந் தீயெழக் கண்சிவந் தானும்**
**வம்புநற் கொன்றையி னானும் வாட்கண்ணி வாட்டம தெய்த**
**அம்பர ஈருரி யானும் ஆரு ரமர்ந்தஅம் மானே.**

தனது வெற்றியே மிகும்படி கொம்புடைய நல்ல வேனில் காலத்து அரசனாய மன்மதனை தன்செயல் கெட்டு பொடியாகிட புன்முறுவல் பூத்தவனும், நல்ல செம்பினைக் கொண்டு முப்புரங்களின் மதில் மூன்றும் நெருப்பெழும்படி கண்சிவந்தனும்: வாசங்கமழும் நல்ல கொன்றை மலருடையவனும், வாள்போலும் கூரிய கண் உடைய உமையம்மை வாட்டம் கொள்ளும்படி மேலான வெளியில் வந்த மதயானையின் பெருந்தோலை உரித்தவனும் திருவாரூர் அமர்ந்த எம்பெருமானேயாகுவர்;

மன்மதனின் ஆட்சி என்றும் குன்றாது, வேனில் காலம் அவனது ஆட்சிக்குரிய காலம் சித்திரை தொடங்கி ஆடி வரையும் அவனது ஆட்சிக்குரிய பருவகாலம் மன்மதனுக்கு கொம்பு இளம்பிறைக் கொம்பு என்பது வெற்றியை தெரிவிக்கும் பொருட்டு ஊதப் படுவது; இதனாலே காம உணர்ச்சி தலைப்பட அவன் செயல் வேனில் காலத்தில் மிகுதியானதாகவே என்றும் வரும்.

கொடியவர் ஆட்சிக் காலத்தில் அவர் செயலே மிகுதியாகத்தென்படுதல்போன்று கொடிய காம உணர்ச்சிகள் அடியார்களை வருத்தாதிருக்கும் பொருட்டு மன்மதன் தன் கொடுமை கெட்டிட புன்சிரிப்பால் உடலெலலாம் வேவ எரித்தருளியவாறாகும்.

காலத்தை வென்று காலத்திற்கேற்ற காம உணர்வுகளைகளைக் களைந்திட சிவன் திருவடி காப்பாகியது என்ற வகையாகும் இப்பாடலின் கருத்து,

இரும்பு பொன் வெள்ளி என்னும் மூன்று மலைகள் செய்து அதனை அரண் எனும் காவலாகக் கொண்டு முப்புரத்து அரசர்கள் தேவர்கட்கு இருக்கண் செய்தனர், இந்த இடுக்கணை தேவர்கள் சகிக்கமுடியாது தவித்தலால் பொன் வெள்ளி இரும்பு என்னும் மதில்களை அழித்திட வேண்டி வந்தது. இதற்கு செம்பையே சிவன்பாலித்தார், செம்பு என்பது உலோகம் ஆயினும் அது களிம்புடன் இணைந்தது. அந்தக் களிம்பு என்பது நீக்கினால தான் செம்பு நன்றாகவரும்,

உண்மையில் இவைகள் யாவும் தத்துவார்த்தம் நிறைந்த கருத்துகள் இதை நாம் சரித்திரமாகக்கொள்ள முடியாது. சரித்திரமாக நமது சமயக் கதைகள் எதனையுமே நாம் ஏற்க முடியாது. ஏனெனில் இந்தச் செய்திகள் எந்த ஆண்டுக்காலத்தில் ஏற்பட்டது என்பது கேள்வி? இதற்கு யாருமே பொருள் காண மாட்டார்,

ஆகையால் ஒரு உண்மையை நாம் எல்லோரும் ஏற்க வேண்டும் எமது சைவசமயம் மிகமிக மேலானது.

எப்படி மேலானது என்றால் சமயம் என்பது சரித்திரமாக இருக்காத நிலையில் இருப்பது, ஏனைய எல்லாச் சமயமும் சரித்திரத்துடன் இணைந்தன'

எமது நாயன்மார் அனைவரும் எம்பிரான் சிவனுவடய அருள்பற்றி ஆராய்ச்சி வேண்டியதில்லை. அன்பு செய்து பணிமின்கள் எனக் கூறினர், அன்பு செய்து பணிதல்தான் எவ்வாறு என்பது கேள்வி? இதனை தத்துவார்த்தமாக உணரின் அன்பு என்பது எப்படி என்றால் பிறநல நாட்டத்திற்காக ஒருவரிடம் அன்பு கொள்வதிலும் ஒரு நாட்டமும் இல்லாத நிலையில் அன்பு செய்தல் தலையாகும்.

இந்த நிலையில் சிவனிடம் அன்பு செய்தல் தலையர்னதாக விளங்கிடவே பிறநாட்டம் இல்லாதிருக்க பிற நாட்டங்களை வருவிக்க நிற்பனவாகும். இரும்பு பொன் வெள்ளி மூன்று மதிலையும் எரிக்கவேண்டி வந்துளது. உலகில் இவற்றை நாம் ஆராய்ந்தால் மூன்று பொகுள் நம்மைப் பிடிக்கிறது. அவை மண் பெண் பொன் என மூன்றாகும், இந்த ஆசை மூன்றும் மலம் எனப்படும். ஆதலினாலே இந்த மூன்று ஆசைகளுமே அடியார்களைத் தாக்காதிருக்கவே முப்புரம் எரிசெய்ததாகும்;

சிவன் அடியார்களிடத்து மூவாசைகளும் தலைப்பட்டல் அது ஒரு போதும் நன்மை தராது,

இதற்காகவே செம்பில் சிவனுருச் செய்து நாம் வழிபடுகிறோம். செம்பு மூன்றாகும் பொன் வெள்ளி இரும்பு என்றும் மூன்றையும் நீறாக்கிடும் வித்தகம் பின் ஒருமுறை பேசுவோம்.

**ஊழியளக்கவல் லானும் உகப்பவர் உச்சியள் ளானும்**
**தாழிளஞ் செஞ்சடை யானும் தண்ணமர் திண் கொடி யானும்**
**தோழியர் தூதிடை யாடத் தொழுதடி யார்கள் வணங்க**
**ஆழி வளைக்கையி னானும் ஆரு ரமர்ந்தஅம் மானே.**

சாதல் பிறந்தலின்றி தான் என்றும் இருத்தலால் ஊழிகள் பல வந்து வந்து போக அவை யாவை எத்தனை என்று அளந்திடவல்லமை உடையவனும்; தன்னை உகந்து உள்கி உகப்பாரது உச்சியில் தான் இருப்பவனும்: தாழ்ந்து விளங்கும் இளமை கொண்ட சடை என்றும் உடையவனும் குளிர்மை காணும் திண்ணிய இடபத்தைக் கொடியாக உடையவனும்; தோழியர்கள் எம்பிரார்க்கும் நாயகிக்கும் தூதாக இடையில் நின்று பிரிவின் துயரத்தை எடுத்து விண்ணப்பித்து பல முறையும் சென்று சென்று மீண்டுவர். அடியார்கள் நித்தலும் வணங்க கடலில் காணப்பட்ட சங்கைக் கையில் கொண்டவனும் திருவாரூர் அமர்ந்த மிகப் பிழையோனான சிவனாகும்.

இப்பாடலும் தத்துவங்கள் நிறைந்த பாடலாகும். சிவன் என்ற பொருள் அது ஒரு காலமும் பிறப்பதில்லை, அல்லது இறப்பதில்லை. அல்லது பெயரில்லை; செயல் இல்லை. அது ஒன்றை மறப்பதில்லை; அல்லது நினைப்பதில்லை. அது ஒரு வடிவத்தைக் கொள்வதில்லை. அல்லது அவ்வடிவம் வேண்டாமென்று நீக்குவதுமில்லை. சிவத்தின் சிறப்புக்கள் இதுவேயாகும். இதனை உணர்வு தென்றால் கடவுள் என்ற பொருள் ஒன்றேதான் என்பது தெளிய வேண்டும்; கடவுள் பிறந்தாலல்லவோ இறக்கும். ஆதலாலே கடவுள் சிவமூர்த்தி பிறப்பதில்லை. கடவுளிற்கு சிவன் என்ற பெயரில்லை, சீவன் என்ற பதத்திலிருந்து சிவன் என்ற பதம் வந்தது.

கடவுள் உடம்புடன் கூடியவுடன் சீவன் என்ற பெயரால் விளங்கும் என வேதநூல் தெளிந்த பெரியோர் மொழிகின்றனர். வேதநெறி என்றது உண்மைப் பொருள் ஒன்றிலிருந்து வெளிப்பட்டதாகும் என்பது பொருள்.

வடமொழியில் நமது மந்திரங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் இருத்தலினல் அதன் கருத்துக்கள் வெளிப்படையாக விளங்காது போதலால் கடவுள் என்ற பதம் யாது என நம்மக்கள் உணராது பல காலமாக வெறும் சமய வியாபாரி .ள் கையில் சிக்கிக் கொண்டனர் இதனுலே வடமொழி சமய பிராமணர்க்கு சமபநெறி இதுதான் என்பதைத் தெரிந்தும் தாம் தமது தொழிலை பிழைப்பாகக் கொண்டதால் உண்மையை ஏற்றிட விரும்பினர் அல்லர். ஏன்? உண்மையைச் சொன்னல் பிழைப்பு கெட்டுவிடும்! மக்கள் தெளிந்தால் பின்னர் தன்னிடம் அர்ச்சனைத் தட்டம் நீட்டார். கும்பாபிஷேகமென்று ஏமாற்ற முடியாது இப்படிப் பல பல உள.

இதனை விபரித்தல் முறையன்று.

ஆகையால் கடவுள் என்ற பொருள் ஒன்ருகி உயிர்க்கு உயிராகி என்றுமுள்ளதாகி இருத்தலின் ஊழி அளக்கவல்லான் திருவாரூர் இருந்த ஈசன் என்று கூறிவிட்டு பின்னர் அதனை உகந்து உலகி நினைப்பார உச்சியில் இருக்கின்றவனும் எனக் கூறுகின்ருர், தலையில் கடவுளை வைத்துக் கொண்டு இன்றைய சண்டாளரிடம் சென்று ஏன் இரக்க வேண்டும், கோயிலில் இருப்பது தலையில் இருப்பது என்ருல் கோயில் எப்படி இருக்க வேண்டும்?

அடுத்து தோழியர் தூதிடையாட என்பதுமே தத்துவார்த்தக் கருத்தாகும், இதுதான் ஆன்மாவும் பரமான்மாவும் என்ற வேருன நிலையில் இருப்பாரை ஒன்ருன நிலையில் ஆக்கிட தோழி என்றும் திரோதான சத்தி எடுக்கும் முறையாகும். இந்த திரோதான சத்தியின் செயல்தான் அடிமைத் திறத்தின் செயல்கள், அதாவது தொண்டு என்பதாகும். ஒரு தலைவனுக்கு தலைவி பணிபுரிதல் போன்றதே தொண்டு.

ஆதலால் சிவனுக்காக நந்தவனம் வைத்தல் அந்த மலர்களைப் பறித்தல் பூசை செய்தல் நீராட்டல் இவை என்றும் நிகழும் சத்தியின் செயலாம், இவை விரிக்கின் இப் பத்திரிகையின் 8 பக்கமும் போதாது.

ஆதலாலே தொழுது அடியார் வணங்க எனக் கூறிவிட்டு தொடர்ந்து ஆழிவளைக்கையினுனும் என்ற போது கடலிடம் பெற்ற சங்கைத் தனது கையில் ஏற்றியவன் எனக் கூறினர். ஏனெனில் சங்கநாதம் சிவசம்பந்தமாகும்.

எமது சிவாலயங்களில் எல்லா இசையிலும் சங்கநாதமே மிக வேண்டும்.

ஒவ்வொரு சைவமக்கள் இல்லம் தோறும் சங்கநாதம் ஊதப்பெறல் வேண்டும். சங்கநாதம் கேளாத கிராமத்தில் அல்லது நகரத்தில் குடியிருக்க வேண்டாம் எனத் திருநாவுக்கரசர் கூறுகின்ருர், 5

ஊர்திரை வேலையுள் ளானும் உலகிறந் தொண்பொரு ளானும்
சீர்தரு பாடலுள் ளானும் செங்கண் விடைக் கொடி யானும்
வார்தரு பூங்குழ லாளை மருவி யுடன்வைத் தவனும்
ஆதிரை நாளுகந் தானும் ஆரூ ரமர்ந்தஅம் மானே.

ஊரும் திரை உடைய கடலில் உள்ளவனும்; உலகம் எல்லாம் இறந்த நிலையில் விளங்கிடும் நுண்ணியபொருளாயவனும், சீர்நிறைந்த பாட்டில் உள்ளவனும், சிவந்த கண் உடைய இடபக்கொடி உடையவனும், வார்ந்து விளங்கிடும் பூச்சூடிய கூந்தலுடைய உமைஅம்மையாரை தனது உடம்புடன் மருவதான் வைத்துக் கொண்டவனும்; திருவாதிரை நாளை தனக்கு உகந்த நாளாகக் கொண்டவனும்; திருவாரூரில் அமர்ந்த சிவன் ஆவான். கடவுள் ஆவான்.

கடலில் திரைபுரள்கிறது? எப்படி; இது நடக்கிறது என்ருல் அது சிவன் அருளால் நடப்பது. சிவன் கடலில் இன்றேல் கடல் திரைபுரளாது. ஆதலினுலே ஊரும் திரையுளான் என்ருர்.

உலகம் உருளுகிறது! உலகங்களில் நாம் வாழுகின்ருேம். உலகங்களில் உள்ள போக போக்கியங்கள் நம்மை மயக்கலாலே உலகம் பற்றி மேல் சிந்தித்து இவை எல்லாம் யார் நடத்துகிருர் என்பது தெளியாமல் போய்விட்டது. ஆனதினுல் கடல் திரைபுரள்வதற்கு மூலகாரணமான அப்பொருள் சிவன் என்பதை மறவாதிருங்கள். அவரை நீங்கள் காணவேண்டின் உலகம் என்ற நிலையாற வேண்டும். ஆதலினுலே நீர் அவனைச் சிந்தித்துச் சிந்தித்து உலகையே மறந்தால் அப்பொழுது அவனுகவே விளங்குவதைக் காண முடியும்.

இதனை அருணகிரியார் தமது திருப்புகழ் ஒன்றில் கூறும்போது ''உலகம் என்று பேச அறியாத பருவம் ஒன்றிலாத பருவம்'' எனக் கூறுகிருர். ஆதலினுல் நாவுக்கரசர் உலகிறந்த ஒண்பொருளானும் என்கின்ருர்.

சீர்தருபாடல் என்றது தேவாரப் பதிகங்கள் போன்று சிவன் அருள் பெற்றுப் பாடிய பாடலாகும்.

திருவாதிரை நாள் சிவனுக்கு மிகவும் பிரீதியான நாளாகும். 6

தொழற் கங்கை துன்னிநின் ருர்க்குத் தோன்றி யருளவல் லானும்
கழற் கங்கை பன்மலர் கொண்டு காதல் கனற்றநின் ருனும்
குழற் கங்கை யாளையுள் வைத்துக் கோலச் சடைக்கரந் தானும்
அழற் கங்கை யேந்தவல் லானும் ஆரு ரமர்ந்தஅம் மானே,

தொழற்படும் பொருட்டு அங்கையைக் கூப்பி வணங்கி நின்ருர்க்குத் தோன்றியருளவல்லவனும்; நன்குடைய திருப்பாதத்தை நினைந்து அழகிய கையில் பல மலர்களைக் கொண்டு எம்பெருமான் பால் அடியார்கள் காதலித்து சொரிந்து வழிபட எங்கும்தான் ஒருவனேயாகி நின்ருனும், நல்ல கூந்தலுடைய கங்கை என்னும் பெண்ணை தனது கோலமான சடை உள்ளாக வைத்து அப்பெண்ணை வளித்தோன்ருதபடி மறைத்து வைத்தவனும். நெருப்பைத் திருக்கையில் ஏற்றியருள வல்லவனும் திருவாரூர் அமர்ந்த கடவுளாவான்.

தொழற்கங்கை என்பது தொழற்கு அம்கை என்பதும் அல்லது வழிபடும் பொருட்டு (கங்கை) நீரை நித்தலும் வார்த்து நின்ற அடியார்க்கு எனப்பொருள் கொள்ளலாம். கங்கை என்பது நீர் என்பதுவே சாலவும் சிறந்தது. தொழற்கு அங்கை என்பதும் சரியே!

''கூம்பலம் கைத்தலத்து அன்பர் என்பூருகக் குனிக்கும் பாம்பலங்காரப்பரன்'' என்பதும். ''அகத்தடிமை செய்யும் அந்தணன் அரிசிப் புனல் கொண்டு வந்து ஆட்டுகின்ருன்'' என்றதாலும்; இவை இரண்டும் பொருந்துவதே. சிவனைக் காணவிரும்பின் நித்தலும் நீராட்டல் வேண்டும் என்பது பொதுவிதி. சிவன் அருள் பெறுதற்கு அதுவே விதி. இன்றும் நந்திக்கு சிவனுக்கு குடநீராட்ட மக்கள் காசு கொடுத்து செய்விப்பதைக் காணலாகும்.

''கைப்போது மலர் கொண்டு காதலித்து வானேர்கள் முப்போதும் முடிசாய்த்துத்தொழ நின்ற முதல்வன்'' என்பதால் கழற்கங்கை பன்மலர் கொண்டு காதல் கனற்ற நின்ருனும் என்ருர்.

கங்கையைச் சடைஉள் வைத்தாலும் வெளித்தோன்ருதபடி அது மறைந்தே உள்ளது என்றதால் கங்கையாளைக் கோலச்சடையில் உள்ளாகவைத்துக் கோலச்சடைக் கரந்தானும் என்ருர்.

அழல் அங்கை ஏந்தவல்லான் என்ருர். இதன் கருத்து எல்லாரையும் சுட்டு எரிக்கும் நெருப்பு சிவனிடத்தாகக் கையில் உண்டு என்பதாகும். எனவே கடவுள் என்பது நெருப்பால் அழியாது காற்ருல் அழியாது நீரால் மூழ்காது என்னும் பொருள்ளாம். இவையாவும் தத்துவக் கருத்தேயாகும். 7

ஆயிரந் தாமரை போலும் ஆயிரஞ் சேவடி யானும்
ஆயிரம் பொன்வரை போலும் ஆயிரந் தோளுடை யானும்
ஆயிர ஞாயிறு போலும் ஆயிர நீண்முடி யானும்
ஆயிரம் பேருகந் தானும் ஆரூ ரமர்ந்தஅம் மானே.

ஆயிரம் தாமரைப் பூப்போலும் ஆயிரம் சிவந்த திருவடிகளை உடையவனும். ஆயிரம் பொன்மலைபோலும் ஆயிரம் தோள்களை உடையவனும்; ஆயிரம் சூரியர்களைப்போலும் ஆயிரம் நீண்ட முடிகளை உடையவனும், ஆயிரம் பேராகத்தான் பேரிடப்படுவதை தான் மகிழ்ந்து ஏற்றுக்கொள்பவனும் திருவாரூர் அமர்ந்த சிவனுவான்.

இப்பாடல் முழுவதும் தத்துவம் நிறைந்தது. நல்வாழ்வுடையார்க்கு இவை விளங்கிடும்! எல்லாப் பொருளையும் பிறர்க்கு ஈந்துதான் வெறுவியாக நிற்கவல்ல மனமுடையார்க்கு ஓரளவு இதன் தத்துவம் விளங்கிடும்! நாம் இதற்குமேல் என் சொல்லலாம். புலமையின் செருக்குத்தானும் இப்பாடலின் உண்மையை உணர அணுகவிடாது.

எல்லாம் சிவனென்று நின்ற நிலையே இதுவாகும். இதனை மாணிக்கவாசகர் ''தான் ஒருவனுமே பலவாகி நின்றவா'' என்று கூறிவிளங்கிட வைக்கிருர்:

அங்கிக்கென்ருேடாதே அவனிவனென்று எண்ணுதே எங்கும் சிவனே எங்கும் சிதம்பரம் எங்கும் எங்கும் திருக்கூத்து எங்கும் அருள் பெருக்கம் உண்டு என்று கண்டு தெளிந்து பெரியோர் பலர் உறுதி தந்துள்ளனர். 8

வீடரங் காநிறுப் பானும் விசும்பினை வேதி தொடர
ஓடரங் காகவைத் தானும் ஓங்கியொ ருழியுள் ளானும்
காடரங் காமகிழ்ந் தானுங் காரிகை யார்கள் மனத்துள்
ஆடரங் கத்திடை யானும் ஆரூ ரமர்ந்தஅம் மானே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தி நிலையை அடைதலே தனது நாட்டிய அரங்காக வைத்து அதில் யார் யார் வருதற்கு தகுதி உடைய தொண் புரிவார் என நிற்பவனும்: வானத்தை பிரமா தன்னைத் தொடர ஓடிச் செல்வதற்கு வழியாக வைத்தவனும். ஒவ்வொரு ஊழியாக ஓங்கி ஓங்கி உயர உள்ளாகத் தான் உள்ளவனும், சுடுகாட்டை தனது நடமாடும் இடமாக வைத்தவனும் தன்னை வணங்கிடும் பெண்கள் (அடியார்கள்) மனத்துள்ளாக தான் ஆகும் அரங்காக வைத்து அதன் இடையில் இருப்பவனும் திருவாரூர் அமர்ந்த பெருமானுவான்.

இப்பாடல் முழுவதும் தத்துவமே! ஒரு பொருளே உலகம் உயிர் உடம்பு இவற்றினைத் தந்து அதனூடுதான் நின்று ஆங்காங்கு பரிபக்குவமுடைய ஆன்மாக்களுக்கு முத்தி இன்பத்தை அளவிடற்கரிய பேரின்பத்தை வழங்கியவாறு இருக்கிறது. அது தன்னை அடைய விரும்பிய பிரமனை முயற்சியால் முடியாது முடியுமெனில் பறந்து தேடிப்பசர் என்று வானத்தில் பெரும் வெளியை வழியாக வைத்தது என்றதால் வீடு அரங்காக நிறுப்பான் என்றும் பின்னர் விசும்பினை பேசி தொடர ஓடு அர்ங்காக வைத்தாலும் என்றார்?

ஒவ்வொரு ஊழிக்காலமும் ஒன்றிலிருந்து ஒன்றாக வெளிப்பட்டபடி, இருக்கிறது, அது அப்படியாக தன்னிடத்தே தோன்றுகிறது என்றதால் ஓங்கி ஓர் ஊழி உள்ளானும் என்றார்;

காரிகையார் என்றது அடியார்களை பக்குவ ஆன்மாக்களை என்பது பொருளாகும். இவை பூ நீர் இவற்றால் வழிபட்டுவரும் நல்நிலை நோக்கி முன்னர் முன்னர் வீடு அரங்கா நிறுப்பானும் என்றார்.

எல்லாம் அவன் செயல் என்பதின் விரிவாக்கம் இவை. 9

**பையஞ் சுடர்விடு நாகப் பள்ளி கொள் வானுள்ளத் தானும்**
**கையஞ்சு நான்குடை யானைக் கால்விர லாலடர்த் தானும்**
**பொய்யஞ்சி வாய்மைகள் பேசிப் புகழ்புரிந் தார்க்கருள் செய்யும்**
**ஐயஞ்சின் அப்புறத் தானும் ஆரு ரமர்ந்தஅம் மானே.**

நஞ்சுடைய பையிலே இரத்தினத்தைக் கொண்டு ஒளிவிடுகின்ற அநந்தன் என்னும் நாகத்தின் மேலாகப் பள்ளி கொள்கின்ற திருமால் தேவனுடைய உள்ளத்தில் இருப்பவனும்; இருபது கைகளை உடைய இரர்ட்சதன் இராவணனை தனது கால்விரலால் மெதுவாக அமுக்கி அவன் வலியை அடக்கி நின்றவனும் பொய்யினைப் பேசப் பயந்து பதில் உண்மையே பேசிக்கொண்டு எம் பிரானைப் போற்றிப் புகழ்ந்து நிற்பாரது இருபத்தைந்து தத்துவங்கட்கு அப்பாலாக உள்ளவனும் திருவாரூர் ஆலயத்தில் அமர்ந்தருளிய கடவுள் சிவமூர்த்தியாவர்.

திருமால் கருணை உடையவர். காக்கும் தனிக்கடவுளாயவர். அவரது கருணை உள்ளம் ஒளிவடிவான சிவமூர்த்தியாவதாகும். இல்லரிருந்தால் போர்ப்படையான சக்கரம் கொண்டாலும் அப்படையின் காவலும் சிவனருளேயாகும். சங்கரமும் சிவனதே என்றதால் திருமால் உள்ளத்தான் என்றார்.

நாகத்தின் நச்சுப்பையில் இர்த்தினம் இருப்பதால் அது ஒளிவிடும் பையாகியது. நஞ்சுதான் பின்னர் இரத்தினமாக மாறுவது ஆதலினாலே துன்பம்தான் பின்னர் இன்பமும் ஆக வேண்டும்,

இதனால் சிவனடியார்களுக்கு தீமைதானும் பின்னர் நன்மையாகும் எனச் சொல்லப்பமெறும்.

கையஞ்சு நான்கு என்றது இருபதாகும். எனவே இருபது கை உடைய இராவணன் என்பது குளிப்பு

இறைவனைத் துதிப்பார் பொய் பேச அஞ்சுதல் சிறப்புடையதாகும், கொடுமைக்கும் அஞ்சாது பொய் பேச அஞ்சுதல் மேலானதாகும், உயிர்போக வரினும் பொய் பேசுதற்கு அஞ்சி உண்மை பேசி வகழ்வார்கட்கு கூடவே இருந்து அருள் புரியும் கடவுள் எம்பெருமான் என்றார்.

ஐயஞ்சின் அப்புறம் என்றது இருபத்தைந்து தத்துவங்களுக்கும் அப்பாலாய இனிய பொருளாகும் என்பது பொருளாகும்,

எல்லாரிடத்தும் கடவுள் உண்டு நாம் அவனை நித்தலும் வணங்குகின்றோம். ஆனால் பொய்மை நீக்கி உண்மை பேசி வாழ்பவர்கட்கு நிச்சயம் போற்றுதலுக்கு அருள் கிடைக்கும் என்பது பொருளாகும்,

# மாவைக்கந்தன் ஆலய குருக்களுடன் சந்திரதீப அறப்பயிற்சி நிலையம் பற்றி சம்பாஷணை

சென்ற இதழ் தொடர்ச்சி;

நான் சொன்னேன் ஐயா; அது ஒரு முடியாத காரியமாக இன்று மக்கள் கருதினாலும் இன்று கும்பாபிஷேகத்தில் ஐயர்மார் சுடலையில் போய் பேய் கூடவென்பது போலவல்லவோ மந்திரம் கத்துறுங்கள். ஐயோ இவர்கள் செய்யும் அநியாயம் போல் யார் செய்கிறார்கள்.

அதகாகத்தான் அட குண்டத்தில் ஓமம் செய்ய இருக்கும் குருக்களுக்காதல் நான் சொல்லும் மந்திரத்தின் அர்த்தம் தெரிய வேண்டும்! ஒருதருக்குமே மந்திரத்தின் அர்த்தம் தெரியாது. எமது பிராமண சமுதாயம் கல்வியில் மிகக் கீழ்மைப்பட்டுள்ளது;

ஒரு மந்திரத்தை எப்படி ஓத வேண்டும். உதாத்த அநுதாத்த சுவரிதம் என்ற வகையில் அவர்களில் எங்கள் நாட்டில் இரண்டு பேராதல் பழகி இருத்தல் நல்லது. அதற்காக எனது ஒரு ஆசை சந்திரதீப அச்சுக் கூடத்தின் அருகே ஒரு சிறு பாடசாலை கட்டியுள்ளேன். அதில் எங்காகுலும் இருந்து இரண்டு பிராமணப் பிள்ளைகளையாதல் எடுத்து நல்ல முறையில் பயிற்றலாம் என்றதும்,

குருக்கள் பெரும் சிரிப்புடன் இதென்ன எல்லா ஐயமாரும் உம்மை பிராமணத் துரோகி என்கிறார்கள். நீர் எப்படி வேத அற நிலையத்தை நடத்துவீர், யார் பயில வருவார் என்றதும்,

நான் அவரை நோக்கி ஐயா சந்திரதீபப் பத்திரிகை யாருக்காக நடத்துகிறேன், எண்ணிப் பாருங்கள் நான் சிவனுக்காக வடிவேலை அருளிய அப் பகவானுக்காக நடத்துகின்றேன்;

எமது பெரியோர் அனைவரும் கடவுள் சிவமூர்த்தி கல்லால விருட்சத்தின் கீழ் அமர்ந்து சிவதருமம் உரைத்தார் எனக் கூறினார்கள். இன்று கடவுள் உரைத்த தருமம் குன்றி அதர்மம் தலை தூக்கியுள்ளது;

அதர்மத்தின் வழியே எல்லாப் பிராமணர்களும் போய்க் கொண்டிருக்கிறார்கள். ஆனதினாலே கல் ஆலவிருசத்தின் கீழ் இருந்த் கடவுள் திருவடியில் நம்பி நான் இந்த அற நிலையத்தை உருவாக்குகின்றேன்.

என்னிடத்து இதில் ஏதும் தற்பெருமையோ, வஞ்சமோ, ஏமாற்றமோ இல்லை. பத்திமையையும் அடிமைத்தனத்தையும் உள்ளாக உணர்ந்து என் பணியைச் செய்வேன். அதர்மம் பெருகிய போது அதனைத் தண்டித்து அறத்தை நிலை நாட்டும் பணி முருகன் திருக்கை வேலுடையதாகும்.

'வேலாறு' வஞ்சனையின் உறைவிடமான கிரவுஞ்ச மலையை பொடியாக்கிய பெருமான் உளன்;

அவன் பரஞ்சுடராகும் சிவனது நெற்றித்தலத்தினின்றும் தானாக உதித்தவன். வேதங்களும் அவனைக் காண முடியாது. நல் ஒழுக்கம் தலைநின்று நான்கு வேதங்களின் வழி ஒழுகும் பெரியோர் அவனை அடைந்து அவன் அருளால் உலகை ஆண்டார்கள்.

ஆகையால் இந்த வேத அற நிலையம் இயங்குவது பூரணமாக அவனது அருளேயாகும்.

இலங்கை, இந்தியா எனும் இரு நாடுகளின் சைவ நலனுக்காக என்னால் இயன்ற வரை இந்த அல நிலைய மூலம் தகவராகும் பிராமண உத்தமர்களை உருவாக்க அவனருளால் முயல்வேன்.

நீரே அறிவீர் எனது பத்திரிகையை தடை செய்ய சிவத்தமிழ்ச் செல்வி தலைமையில் சட்டத்தரணி சிவப்பிரகாசம் சட்டத்தரணி கனகநாயகம் (முன்னாள் செனற்றர்) மில்க்வைற் சவுக்கார முதலாளி கனகராசா எல்லாரும் தூதுக் கோஷ்டியாக அரசாங்க அதிபர் யோகேந்திராவிடம்சென்றனர். என்ன நடந்தது?

என்றதும் ஐயோ சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா மிகவும் மன வேதனை படுகிறா எல்லாப் பத்திரிகையிலும் தன்னைப் பற்றி இரு வார்த்தை இலாது இல்லை என என்னிடம் கூறுகின்றா என்றதும்,

நான் சொன்னேன் ஐயோதங்கர்ம்மாவில் தனிப்பட்ட கோபம் எனக்கில்லை. அப் பெண் எமது சமய நெறிகளை வியாபாரமாக்கி விட்டாள்; தெல்லிப்பழையில் தொண்டபடை என்பதே ஒரு காடைக் கூட்டம்! அவர்கள் அடி பிடி சண்டை முதல் பெரும் பழுதான செயல் புரிகிறார்கள். உங்களுக்குத்தானே தெரியும்;

பிரசங்கம் செய்வது பெருமை உடையதல்ல. ஆத்மீக ஒழுக்கம் தான் பெரிது! அகிம்சை புலனடக்கம் சத்தியம் சாந்தம் தவ நெறி எதுவுமே அப் பெண்ணிடம் இல்லை. அப் பெண் ஒரு ஆசிரியை ஆனபடியால் மேடையில் வடிவாக திருநீற்றுக் குறியுடன் பேசி இரகசியமாக தனது எதிராளிகளை முடித்துக் கட்ட எண்ணினர். பின்னர் அத்தகைய பெண்ணை ஐந்தாம் குரவர் ஆறுமுகநாவலரின் பின் ஆரும் குரத்தி என்று சொல்லி அப் பெண்ணின் காலைக் கழுவி சில பேதையர் தம் தலையில் அது பாத தீர்த்தமென்று தெளிக்கும் போது அப் பெண்ணிடம் சைவ நலன்கள் இல்லை. ஏன் இத்தகைய வேலை செய்து எங்கள் சமயத்தை அவமானப் படுத்துகின்றிர் என்று சொல்ல வேண்டி வந்தது பொது மக்களின் நலன் கருதியேயாகும் என்றேன்.

குருக்கள் சரி சரி ஏதோ உமது முயற்சி ஒரு நல்ல காரியம் சீக்கிரம் அதைத் தொடங்கும். நல்ல காரியத்திற்கு முதல் தடை வந்தாலும் பின்னர் அது சிறப்பாய் முடியும் என்றார்;

## சந்திரதீபம் வாசித்த பின் எழுந்த குறிப்புகள்

கோயில் வீதி
மாவிட்ட்புரம்
தெல்லிப்பளை

ஐயா'
இதழ்4: சுடர்3 (24—10—80)
இதைப் படித்ததால் எழுந்த குறிப்பு

மனிதன் வெளி வேசத்தால் தன்னைதானே ஏமாற்றுவது போல் உலகையும் ஏமாற்ற பார்க்கின், வெளி வேசம் போடும் ஒருவனுடைய உள்ளம் அவனால் போடப்படும் வெளி வேசத்தை இது உலகை ஏமாற்றுவதற்குப் போடப்படும் வேசம் என்பதை நன்கு உணரும் வேசதாரி தன் உள்ளத்தை மறைத்துத் தன் மன இச்சை ஏதேதோ சொல்லிச் செய்கிறான், இச் செயல் அவன் உள்ளச் செயலன்று. இதனால் வேசதாரிக்கும் பலனில்லை தன் உல்லாச வாழ்கையை மேலும் உல்லாசப் படுத்துக் சமய வளர்ச்சி போலும்' இந்த வெளிப் பகட்டு நிலை நிலை நிற்காது அவன் மனட்சாட்சியே அவனை அழித்து விடும் மெய்;வாக்கு அன்றும் இன்றும் என்றும் அழியாது.

இன்றைய சயய வளர்ச்சிக் காரர்கள் தங்களையே முன் வைத்து நாடகம் நடிக்கிறார்கள் சமய நால்வர் அந்த உண்மைப் பொருளையே முன் வைத்துப் பின் சென்றார்கள் இதுவே அவர்களுக்கும் இவர்களுக்கு முள்ள வித்தியாசம். நான் எனது என்ற நிலை அழிவதற்கு பதிலாய் நான் எனது என்ற நிலை மேலும் மேலும் அகங்கரிக்கிறது, இது ஒரு பொழுதும் சமய நிலை ஆகாது. பூமி இவர்களை குழிதோண்டி புதைத்து விடும் நீர் இவர்களை அமிழ்த்திவிடும் நெருப்பு இவர்களைச சுட்டெரித்துச் சாம்பராக்கி விடும் வாயு இவர்களைச் எடுத்து வீசிவிடும் ஆகாயத்தைப் பற்றி பேசவும் வேண்டுமோ? போலி வேசதாரிகளுக்கும் தன்னைத்தானே ஏமாற்றி உலகையும் ஏமாற்றுபவர்களுக்கும் எங்கே ஐயா அமரத்துவ வாழ்வு. செயற்கரிய செயல் இவர்களால் ஏதும் செய்ய முடியுமா என்ன?

இப்படிக்கு:
வே. தியாகராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வைத்தீஸ்வரன் கோவிலில் மணிஐயர் மடங்காது அலறிஞர் தங்கம்மா அடங்கியே பேசினர்

வண்ணை வைத்தீஸ்வரர் கோவிலில் இம்முறை உற்சவத்தின் போது ஒலி பெருக்கிப் பாவனையை கட்டுப்படுத்திய நிலையில் பாவித்தார்கள். ஆனல் சங்கூத மழை பெய்யத் தம்பிரான் தன் காலைக் கருமங்களைச் செய்வது போல மணிஐயர் மட்டும் தான் பிரசங்கம் செய்யும் போது சத்தத்தை உச்சத் தொனியில் விட்டு உரக்கக் கத்திஞர். ஏனென்றல் வண்ணை வைத்தீஸ்வரர் கோவிலின் பழுதுகளை மறைப்பதற்கு அந்த ஒலிபெருக்கி காணும் என்பது மணிஐயரின் திருப்தி போலும்.

ஆனல் தேர் அன்று தங்கம்மா பேசும் போது சத்தத்தை மிகக் குறை அடக்கமாக, கண்ணியமாகப் பேசினர். உலகில் நன்நெறி எது என்று அறியாத பிராமணர்கள் பூசை செய்யும் அக்கோவிலில் இந்த ஒரு செயலைக் கண்டு சந்திரதீபம் மகிழ்ச்சி தெரிவிக்கின்றது.

## தாவடி பத்திரகாளி கோவிலில்

கட்டியணைத்து முத்தமிட்டு முதல் எட்டிப்பிடிக்கும் வரையான இன்பச் சுவைப்பாடல்கள்.

மன்மதலீலையை வென்ருர் உண்டோ அம்மா! உன் அழகு கண்டால் என சிவராத்திரியில் பத்திர காளியைக் கேட்டு ஒருவர் பல கோண் பூட்டிய ஒலிபெருக்கியில் பாடியகிழ்ந்தார்; பத்திரகாளி என்பதில் கூறியதோ தெரியாது;

சமீபத்தில் கொடியேற்ற ஆரம்ப தினத்தில் கட்டியணைத்து முத்தமிட்டது தொடங்கி மீனுட்சி கல்யாணம் பண்ணலாமா என்ற வகையிய் பல சினிமாப்பாடல்கள் இடம்பெற்றன. ஐயோ பத்திரகாளி வீரபத்திரரைத் தேடி அந்தரப்பட்டிருக்குமோ எனக்குத் தெரியாது, கொடியேற்றின குருக்கள் அன்று இரவு என்ன பாடு பட்டாரோ தெரியாது,

தாவடிப் பிள்ளையார் கோவிலில் நிர்வாணப் பெண் இங்கு கல்யாணமும் கட்டியணைப்பும், இங்கு திருஞானசம்பந்த மடாதிபதி பரமாச்சாரியக் கிருஷ்ணலீலை பற்றி தினம் தோறும் பிரசங்கம் செய்கிருர்,

கிருஷ்ணலீலையில் ஒன்று பெண்களை நிர்வாணமாக குளத்தில் இறக்கிவிட்டு கிருஷ்ணன் பெணகளை சீலையைத் தூக்கிக்கொண்டு மரம் மேலே ஏறினனும்;

இப்படியாக கட்டியணைத்து முத்தமிட்டு கலியாணம் பண்ணி சீலை தூக்கி இந்த நிலையிலே நமது சமயமும் பரமாச்சாரியர்களும் ஐயர் மாரும.

இதற்காகவே திருநாவுக்கரசர் தமது தேவாரத்தில்.

"சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம்"

எனக்கூறிய காரணம் போலும். அவருக்கு வடிவாகத் தெரியும் இந்த மாதிரி காளி கோயில் துர்க்கை கோயில் விஷ்ணு கோயில் போனல் தன்பாடு பெரிய ஆபத்தாகும்.

## கோட்டாரிடம் மன்னிப்புக் கோருகிறேம்

நவாலி அட்டகிரிக் கந்தசாமி கோவிலில் அமரசிங்கம் செல்லையா என்பவர் செய்து கொண்ட சைவ தருமத்திற்கு முரணுண பழிச்செயல்களைப் பற்றி நாம் குறிப்பிடுகையில் அமரசிங்கம் செல்லையா கோட்டுக் கட்டளையைப் பெற்றுக்கொண்டு எனக்குறிப்பிட்டது தவருகும். அவர் கோட்டின் கட்டளையைப் பெற்றுக் கொண்டதாகச் செரல்லிக் கொண்டு என்று திருத்திக்கொள்ளும்படி நேயர்களை வேண்டிக்கொள்கிறேம்,

இதனலே அதன் மீது எம்மீது தொடரப்பட்ட வழக்கில் நாம் நமது தவருன குறிப்பை ஏற்றுக் கொண்டு கோட்டாரின் மன்னிப்பு கோரினேம். இந்த வழக்கு 31-3-81ல் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. நீதியரசரின் உத்தரவு பேரில் இத்திருத்தம் இங்கு தரப்படுகின்றது.

## சந்திரதீபத்தை நக்கல் செய்தார் விக்கல் எடுக்கிருர்

ஆணைக்கோட்டை உயரப்புலம் பிள்ளையார் கோவிலில் சினிமாப் பாடல் போட்டு ஊர்மக்கள் பெற்றும் பெருத பிள்ளைகள் கோவிலில் இவர் என்ன கேட்சிறது என்று சந்திரதீபத்துடன் சவால் விட்டனர்;

மஞ்சவனப்பதி கோவிலில் நடைபெற்ற தவறுகளைச் சுட்டிக் காண்பித்தபடியால் வேதனை உற்றவரும் பிறகோவிலில் நடைபெற்ற தவறுகளைச் சுட்டிக் காண்பித்தபடியாலும் நமது அருகாமைக் கோவிலில் வைத்து என்பேர் சொல்லி ஒலி பெருக்கிபிடித்து 8 கோண் கட்டி ஊர் அடங்கக் சத்தி ஆரவரித்தனர்;

பொதுக் கூட்டம் ஒன்று கூடி என்னை விசரன் பனியன் என்று ஏளனம் செய்தனர். அடங்காப்பிடாரி போன்ற ஒரு பெண்ணைக் கொண்டு ஒன்றும் அறியாத அப்பாவியான மனைவியுடன் என்னைப்பற்றி அவதூறு செய்வித்தனர் அந்தப் பெண் என்னையும் அடிப்பேன் என வழியில் கண்டபோது சொன்னள்,

கோவில் அர்ச்சகராகும் பிராமணச் சிறுவர் என்னைக் கண்டால் மாலு மாலு சுருங்கனி என்று பாடுவார்.

இப்படியான உயரப்புலம் மக்கள் இன்று இன்னவகை செய்வது அறியாது ஏதோ கோவிலில் சச்சரவு பட்டு வழக்கில் போய் ஒலிபெருக்கி பாவிக்கமுடியாது அந்தரப்பட்டு விக்கல் எடுக்கின்றனர்;

அடங்காப்பிடாரிகளையும் அவர் பிள்ளைகளையும் தர்மம் தண்டி முனைகின்றதுபோலும்.

வஞ்சக நெஞ்சர்க்கு எந்தக் காலமும் உலகில் உய்வில்லை என்பதை சைவமக்களே இனியாதல் நம்புவீர்களா! இந்தக் கோவிலில்தான் நாயுன்மார்கட்கு மந்திரவாதி சாம்பசிவக் குருக்களின் மகன் வில்லுப்பாட்டில் என்னை மிகக் கேவலமாக நச்கல் செய்தனர்;

இதை அவ்வூர் பெண்மணிகள் கேட்டு சாம்பசிவக் ஐயரின் மகனைப் போற்றிப் புகழந்தனர்;

## கொழும்பு இராமகிருஷ்ணமிசனில் தருமம் அழிந்தது வியாபாரம் புகுந்தது

கொழும்பு இராமகிருஷ்ண மிசனில் வஞ்சகமும் பொருமையும் ஏற்பட்டுள்ளதாம். சமீபத்தில் ஒரு விழா நடந்ததாம். இந்த விழாவில் தரும நெறியுடன் மிசனில் நடந்துகொண்ட ஓர் சுவாமிக்கு பிரியாவிடை போன்றே இருந்ததாம்;

குறிப்பிட்ட சுவாமி இப்பொழுது மிசனைவிட்டு இந்தியா சென்றுள்ளாராம். மனவேதனையால்தான் அந்த சுவாமி இந்தியா சென்றுள்ளார் என்று அங்குள்ளார் சிலர் என்னிடம் நேரில் தெரிவித்தனர்.

இராமகிருஷ்ணமிசன் பொதுமக்களிடம் பணம் சேர்த்து மிசன்பேரில் கலைகளை வளர்ப்பதற்கும் கலைஞர்கள் துறவிகள் கொழும்பு வந்தால் அவர்கள் தங்கி இருந்து தம்பணி புரிவதற்கும் ஓர் கலைவளர்ச்சி மாடம் 2 மாடிகளுடனும் பல அறைகளுடனும் கட்டியது;

ஆனல் இன்று அது பணம் படைத்தோர்க்கு வசதி செய்து கொடுக்கும் ஓர் ஓட்டலாக மாறி உள்ளது.

செல்வந்தர்கள் சுகமாக வந்து தங்கி இருந்து தமது கொழும்பு அலுவல்களை முடிப்பதற்கு இந்த நிறுவனம் பெரிதும் பயனுகின்றது.

அங்கு பணிபுரியும் சிலர் ஒருவர் வளர்க்கும் நாயிலும் பார்க்க மிகவும் கடினமாக இருக்கிருர் என்பது நேரில் நாம் காணக்கூடியதாக இருக்கின்றது;

இராமகிருஷ்ண வரலாற்றில் இது இப்படியே நடைபெறவேண்டுமென்று அவர் விரும்பி இருப்பார் போலும்.

குருமகராஜ் என்று எல்லாரும் அவரைச் சொல்வார்கள் ஆனல் அவர்க்கும் நோய்வந்தே இறந்தவர்;

எமது நாயன்மாரின் தலைவர் எம்பிரான் சம்பந்தர் அப்படி மரணிக்கவில்லை. எம்பிரான் சம்பந்தரின் வழிவழி அடிமையான சந்திரதீபம் அதன் தற்போதைய ஆசிரியர் வை. நல்லையா இல்லாத காலத்திலும் தருமநெறி பிசகாது என்றும் வாழும் என்பதை எமது சைவமக்களுக்கு எடுத்துக் கூறுகின்றேன்;

## எடே எடேஎன நம்மை சாமி விசுவநாதர் ஏசினர்

யாழ்ப்பாணம் பிராமண சமூகத்தைச் சேர்ந்த சில பிராமணர்கள் நான் எல்லாப் பிராமணர்களையும் கண்டிக்கிறேன் சாமி விஸ்வநாதக் குருக்கள் பற்றி ஒன்றும் எழுதுவதில்லையே என்று என்னிடம் நேரில் கேட்டனர்.

நான் சொன்னேன் இன்று நமது பத்திரிகைமூலம் ஒழுங்கான பிராமணர் எங்கிருக்கிருர் எனக் கேட்டேன் அதற்கு ஒருவருமே பதில் கூறவில்லை;

இம்முறை நவாலி சிந்தாமணிப் பிள்ளையார் கோவிலில் நடைபெற்ற இலட்சார்ச்சனையில் ஒரு உபயதினத்தன்று அதாவது முதலியார் வை. மகேசன் அவர்களின் உபயதினத்தன்று இலட்சார்ச்சனை ஆரம்பிக்க வேண்டிய நேரத்தை பின்போட்டு மணிஐயர் பிரசங்கத்தை முன் வைத்தார்கள்.

சாமி விஸ்வநாதர் அக்கோவில் தர்மகர்த்தாவாக இருப்பதால் அவரிடம் சென்று ஐயா இது தகாத வேலை. இலட்சா அர்ச்சனை சீலமுடைய சிறந்த வழிபாடு அதைக் குழப்பிப் பின்போட்டு மணிஐயர் மடாதிபது என்றல் அவரைக் கூப்பிட்டு முன்னல் இடங்கொடுத்து அவர் காலைக்கழுவியோ குடிக்கப் போறியள் என்றதும் குருக்களுக்கு கோபவெறியாகி என்னடா என்னடா என்று ஏசினர் நான் அவருடன் தொடர்ந்து வாதாட விருப்பமிலாது அவருடைய நிலையை உணர்ந்து பேச்சையும் வேண்டிக்கொண்டு திரும்பினேன்.

பிராமண சமாஜம் சில நாள் நடத்திய விழாவில் அவர்கள் நடந்து கொண்ட முறையை நான் எழுதினல் இங்கு கல்லும் பொல்லுமே நமது இல்லமெல்லாம் பரவும். அது இல்லாமல் போத்தலும் வந்து விழும்.

இதனலே குறிப்பிட்ட ஐயர் இனியாவது தன்னையும் விஸ்வநாதரையும் தமது அறிவு எனும் கண்ணுடியில் காண்பாரா?

## வெள்ளைத்தோலை பெரிதென்று மதிப்பது பழியாகும்!

மேல்நாட்டவர் நமது நாட்டில் சமயம் வளர்ப்போம் என வருவாரைக் கௌரவித்து ஆசனம் கொடுத்து காரில் கூட்டிச்சென்று அவர்கள் வீட்டில் இருந்தால் வேறு நம் நாட்டவரான ஆட்களாக வந்தால் வெள்ளைக்காரர் இருக்கிருர் இங்கு வராதீர்கள் என்று நம் மக்களைக் கலைத்து விடுகிருர்கள் பணம் படைத்தவர்கள் இப்படியாக திருநீற்று நெறியில் இரண்டாட்டல் காணும் பேதைப்பணக்காரர் சிவ தொண்டன் நிலைய நிர்வாகத்திலும் காணப்படுகிருர்;

## வழக்கில் இருக்கும் கோவிலை வணங்கல் பழியாகும்

எந்த ஒரு கோவில் பேரில் மக்கள் கருத்து வேறுபட்டு அன்பு மறந்து வழக்கில் சென்ருர்களோ அந்தக் கோயிலைச் சென்று வழிபடுதல் திருப்பணி செய்தல் பழிவருவிக்கும் என வேதநூல்கள் தெரிவிக்கின்றன;

இதை நம் சைவமக்கள் உணர்ந்து நடத்தல் நன்று,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திர ஒளி குன்றினாலும் சந்திர தீபத்தின் ஒளி குன்றக் கூடாது என்கிறார் பிரபல வைத்தியர் இராமசாமி அவர்கள்

உ

சந்திர தீப ஆசிரியர் அவர்கட்கு!
ஐயா

இற்றைக்கு ஆறு மாதத்திற்கு முன்னரே தங்கள் பத்திரிகையை என்னால் முதன் முதலாக அறியக் கிடைத்தது. மணி மந்திர ஒளஷதங்களுள் அதிக பற்றுடையேன் என்றமையினால் அதனைக் கவனமாகப் படிக்கவும் நேர்ந்தது. அதில் ஓரளவுக்குக் கண்டனங்கள் கொண்டிருந் தமையினால் இக் கண்டனங்கள் சைவ சமய உணர்ச்சியின் பெயரால் எழுதப் பெற்றனவா? அன்றி பத்திரிகை விற்பனவை உற்சாகப் படுத்தும் நோக்கமாக எழுதப் பெற்றனவா? என்ற சந்தேகம் என்னுள் எழலாயிற்று. எனவே அடுத்த நாள் சந்திர தீபம் காரியாலயத்தைப் பார்க்கவும் நேர்ந்தது. தென்னங் கன்று நிழலில் ஒற்றைக் கதிரையில் வறிய தோற்றத்துடன் ஆசிரியர் விடயம் எழுதவும் ஒரே ஒரு நபர் தன்னந் தனியாக இருந்து அச்சுக் கோர்ப்பதையும் கவனிக்கவும் ஆனேன். அடியேனை வரவேற்று உபசார வார்த்தைகள் தந்து வழி விடும் போது தான் ஒரு துவி சக்கர வண்டி தானும் திருப்பிக் கொள்ள முடியாத நுழை பாதையையும் கவனிக்க முடிந்தது. இத்தகைய வறுமைக்கு ஆளாகிய எவரும் கண்டனங்களை கண்டன நோக்கமாகப் பிரசுரிக்கத் துணிய இயலாது எனவே இக் கண்டனங்கள் சமய குறைபாடுகளைக் களைவதன் பொருட்டாகும் என்பதும் என்னுள் உறுதி ஆயிற்று. அன்று தொட்டு ஒவ்வொரு பத்திரிகையையும் தவறாது படித்து வருவதற்கும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது

கொடிது கொடிது இளமையில் வறுமை என்ற ஒளவையாரின் வாக்கிற்கிணங்க நான்கே வயதான சந்திர தீபம் வறுமை அனுபவிப்பதும் நியாயமானது, நியாயமான வழியில் செல்வோரை முன்னேற்றி வைக்கத் தகுந்த குருபரன்கள் பலர் இருந்தாலும் அவர்களுக்கு கையளிக்க மனமும் வரவேண்டுமல்லவா? எனவே எவர் கையையும் எதிர் பார்ப்பதும் அனர்த்தமேயாம்;

சந்திரன் வளர்வதும் தேய்வதுமான இரு தன்மைகளை இயல்பிற் கொண்டுள்ளது எதுவானாலும் வளர்ச்சியடைந்தாலும் தேய்வுக்கும் இடமளிப்பதாகும். உதாரணமாக அரிசந்திரன் என்னும் பெயரை கொண்ட மன்னனின் வளர்ச்சிக்கு ஏற்பட்ட வீழ்ச்சி மட்டுமல்லாது அன்னாரின் மனைவியான சந்திரமதி என்ற அடுக்குப் பெயரை கொண்ட அரசியும் தனது வீழச்சியையும் தனது மைந்தனது வீழ்ச்சியையும் ஒருங்கே தான் அனுபவிக்க லானதும் எடுத்துக் காட்டாகும்; எனவே உங்கள் சந்திர தீபத்தில் கொண்டுள்ள சந்திர என்னும் சொல்லினது வளர் பாகத்தை மட்டும் கைக் கொள்ளல் புத்தியானது என்பதும் அடியேனின் விளக்கமாகும், எனவே வளர் பிறையைப் பேணுதற் பொருட்டும் தேய் பிறையை நீக்குதற் பொருட்டும் பூரண என்னும் பதத்தையும் சேர்த்துப் பூரண சந்திர தீபம் எனக் கொள்வது பிசகாகுமா? சைவ சமயத்துத் தமிழ் எழுத்துக்களினது எண் சோதிடப் படியும் இப்பதம் சூரிய ஆதிக்கத்தைப் பெற்றுள்ள தாகின்றது, சந்திரனிலிருந்து நாம் பெறும் ஒளியும் சூரியனின் ஒளியே ஆகையால் இப் பதம் அதி பொருத்தமானது என்பதில் சற்றேனும் ஐயமில்லை என்பதாம். அடியானுக்கு இது உரியதன்று எனினும் அன்பின் நிமித்தம் எடுத்துக் காட்டலானேன்; பிழையாய் இருப்பின் மன்னிக்கலாம் விருப்ப மிருப்பின் அங்கீகரிக்கலாம்,

அடுத்ததாகச் சந்திர தீபம் சமயம் சார்பாகக் கண்டனங்களை தாராளமாகக் கொண்டுள்ளது, வெள்ளாடு நனைகிறதே என்று வேங்கை புலி அழுவது போல தனிப்பட்ட நபர்கள் சிலர் தங்கள் தங்கள் பிரத்தியேக மனஸ்தாபக் கண்டனங்களையும் ஆசிரியருக்கு கடிதம் என்ற பாவனையில் சிலேடையாக எழுதுமாப் போலவும் தென்படுகின்றது, இவை எவர்க்கும் பலன் அளிக்குமா? என்பதும் சந்தேகம், எனவே ஆசிரியரின உணர்வினாலாகும் கண்டனங்களை பிரசுரித்தும் தனிப்பட்ட நபர்களின் கண்டனங்களை நிராகரிப்பதும் பத்திரிகைக்கு உசிதமாகாதா? அத்தோடு 13.9'80ல் வெளி வந்த சந்திர தீப இதழில் அனாதியான சைவ சமயத்தின் அடிப்படையைக் கொண்டு தோன்றிய பிற சமயங்களை உதாரணமாகக் கொண்டு சைவ சமயத்தை ஒடுக்கிப் பேணும் பொருட்டு திருகோணமலையில் அதிலும் ஒளவையார் வீதியில் வசிப்பவர் எழுதிய கருத்திலிருந்து மக்களின் சைவ விளக்கம் எத்தகைய வீழ்ச்சி அடைந்துள்ளது என்பதும் வெகு தூரம் உணரக் கூடியதாக இருக்கிறது. சிவனன்றி வினாயகரும் வினாயகரை வேண்டாத இடத்துச் சிவனுமில்லை என்பதை மகன் மகேந்திரன் உணரவில்லை போலும்

ஒளவையாரே வினாயகர் அகவலைப் பாடி நற்கதி அடைந்தவரானால் ஒளவையாரின் பெயரை கொண்டுள்ள வீதியில் வசிப்பவர்களே வினாயகனின் மகிமையை நன்கறிந்தவர்களாக வேண்டுமல்லவா? எமது நண்பரின் விளக்கம் சைவமாகிய கடலில் உள்ள உப்புத் தண்ணீர் கொள்ள எடுத்த கைவாளி கொண்டு அக் கடலை வற்ற இறைக்க முயல்வது போலாகும், எனவே அடுத்த அடுத்த சந்திர தீப இதழ்களுள் கணபதியே காப்பு என்னும் ஓர் தொடரைத் தொடங்க இக் கடையேனை அக் கணபதியே அமர்த்த வேண்டும் எனவும் வேண்டுகிறேன்,

க.தி,இராமசுவாமி

# சிவத்தொடு சம்பந்தமுடையது' சைவம் சைவத்தொடு சம்பந்தமுடையது சந்திர தீபம்

## என்கிறார் கிராம சபைத் தலைவர்

உ

சிவமயம்

நல்லூர்
பூநகரி

உயர் திரு
வை நல்லையா அவர்களின்
திவ்விய சமூகத்திற்கு

சிவத்தொடும் சம்பந்தம் உடையது சைவம் சைவத்தொடு சம்பந்தமுடையது தெய்வத் தீந்தமிழ்; தமிழ் மொழி வழங்கும் இடங்களில் உள்ள நல்லறிவாளரும் தேவர்களும் நினது தொண்டின் பெருமையை வியந்து பேசிக் கொள்கிறார்கள். அது கேட்டுப் பெரிதும் மகிழ்வாருள் யானும் ஒருவன் நினது தூய திருத்தொண்டினுக்கு உறுதுணையாக வாய்க்கப் பெற்ற திருவருட் சக்தியை பெற்றார் தம் கூர்மதியை விதியினாலும் வெல்ல முடியாதெனச் சத்துக்கள் சொல்லியுள்ளார்கள் நடுவிலிருந்து நாட்டிற்கு நல்ல தொண்டு நல்கும் தங்களை அறிபவர் சிவபெருமானிடத்தும் அவன்றன் தொண்டரிடத்தும் அத் தொண்டர்கள் தந்த தேவார திருவாசகங்கள் புராணங்கள் முதலாய புனித நூல்களிடத்தும் அன்பு செய்து அவற்றினை தெய்வம் எனப் பூசிக்க தவற மாட்டார்கள் எனவும் பேசிக் கொள்பவரும் உளர்; மனிதருள் தேவர்கள் போல் வாழ்பவர்களையே ஈண்டுத் தேவர்கள் எனக் குறிப்பிட்டேன்

அருள் வழிச் சென்று அயராது ஆற்றும் நின் திருப்பணி பல்லாண்டு நிலைபெறும் என்பதில் ஐயம் உண்டோ?

அமைதி நிலவும் தனி இடங்களையும் மனமானது செவிகளால் நுகரும் இன்னிசை வாயிலாக இறைவன் இணையடிகளைச் சிந்திக்க வாய்ப்பான இடங்களையும் நம் முன்னறி வாளருள் மூத்தோர் நாடினர் என்ப;

சாந்தம் ஊட்டும் தீப ஒழிகள் தூபங்கள் நறுமணங்கமழும் இறைவனுக்குப் பிரியமான இன்னிசைகள் புராணப் பொருள் கேட்கும் இடங்கள் உள்ளும் புறமும் தூய்மையான இடங்கள் என்னும் இடங்களே வாய்ப்பான இடங்கள் என்ப,

நாம் உயிர் எனவும் இறைவன் உயிரை விட்டுப் பிரிய முடியாமல் தாம் செய்து கொண்ட கன்மத்தின் ஆணை வழித் தாம் செலத் தமக்குத் தலைவனாய்த் தாம்படும் அவஸ்த்தைகளால் தான் தாக்கப் படாத சுத்தனாய் என்றும் உள்ளவனே இறைவன் எனவும் அவனருளைப் பெறுதலே பிறவியின் நோக்க மெனவும் உணர்பவர்கள் தமது சிந்தையைச் சிவன் பால் வைக்க நாடும் இடமே வாய்ப்பான இடம் என்று அறிஞர் உரைப்பர் அடியேன் கேட்டுளேன்,

தொண்டர் தம் பெருமையை
ஆரறிவார்

வை;வல்லிபுரம்

# வண்ணைக் குருக்கள் குமுறுகிறார்

உ

சந்திரதீப ஆசிரியர்;

வை;நல்லையா அவர்கள் அறிவது காற்சட்டைக்குள் புகுந்து மேற்சட்டைநீக்கிய எமக்கு உங்கள் சந்திரதீபம் அனுப்ப வேண்டியதில்லை என்பதனை அறிவிக்கிறேன்,

மாகரத்த யானை வழி விலகல் (புன்மலந்தின்) சூகரத்திற் கஞ்சியோ சொல்' என்ற ஆசங்கை தான் தோன்றுகிறது,

இப்படிக்கு
தி.இரத்தினசபாபதிக் குருக்கள்
யாழ்ப்பாணம்

# மானிப்பாய் அரசடி வினாயகர் ஆலயத்தில்

## ஐயரும் அறங்காவலரும் இழுபறி

மானிப்பாய் அரசடி வினாயகர் ஆலயம் தனிப்பட்ட நிர்வாகத்திலிருந்து பொது மக்கள் சார்பில் ஓர் பரிபாலன சபை நிறுவப்பட்டது. ஆனால் புது நிர்வாகத்திற்கு பல பிரச்சினைகளை ஏற்படுத்த ஐயர் முயன்றாராம். புது நிர்வாகம் கோயிலிலே சில நன் நெறிகளை கடைப்பிடிப்பதற்கு பூசை ஒழுங்குகளை நேரத்திற்கு நடக்கும் படியும் வசந்த மண்டபத்திற்குள் எல்லோரும் உட்செல்வதை கட்டுபடுத்தியும் சில நிபந்தனைகளை ஏற்படுத்து அந் நிபந்தனைகள் மூலமாக நிர்வாக சபையினரை திகைக்க வைத்தாராம் ஐயர், உதாரணமாக வசந்த மண்டபத்தினுள் சென்று சுவாமியை தூக்கி வருவதற்கு இருவரை நியமித்ததாம் நிர்வாக சபை. ஆனால் இம்முறை கொடியேற்ற உற்சவத்தின் போது அங்கு அன்று சுவாமியை வெளியே தூக்கி வருவதற்கு குறிப்பிட்ட நிர்வாக சபை அங்கத்தவரான இருவரில் ஒருவர் வரவில்லையாம். அதனாலே வசந்த மண்டப பூசை முடிந்து சுவாமியை வெளியிலே தூக்கி வருவதற்கு வேறு ஆட்கள் முயன்ற போது அதை ஐயர் தடுத்துவிட்டாராம். அதனாலே சுவாமி புறப்பட முடியாது தாமதப்பட்டுக் கொண்டதாம் ஆனால் தெட்சனை வாங்கும் பொருட்டாக கொடியேற்ற தினத்தன்று பல அந்தணர்கள் வந்தனராம். மற்ற அங்கத்தவரோடு சுவாமியை வெளியில் கொண்டு வந்து கொடுக்க ஒருவரும் மனமிலாது வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றனராம்.

கொடியேற்றும் போது சிற் சில தடைகளை ஏற்படுத்தினாராம். கம்பத்துக்கு சூழ பூமாலை தூக்குதல் முதலியன நடை பெறாது வெறுமனே கொடி யேற்றம் நடந்ததாம். இதனாலே நிர்வாக சபை அங்கத்தவர் பலர் வேதனைப் பட்டுக் கொண்டனராம், இப்படியாக ஒரு நிர்வாக சபை அங்கத்தவர் சந்திர தீபத்திடம் நேரில் தெரிவித்துக் கொண்டார்;

சுவாமியை இறக்கி வரும் போது சட்ட பிரச்சினையில் சங்கடம் ஏற்பட்டு சுவாமியே தவறி கீழே விழுந்து விடக் கூடிய நிலைமையும் ஏற்பட்டதாம்.

# சந்திர தீப சைவ அறப் பயிற்சி வளாகம்

சைவம் வளர்க்க முற்பட்ட எமது செயலில் பத்திரிகை மூலம் நல்லனவற்றையும் தீயனவற்றையும் காண்பித்தது மட்டுமன்றி நல்லவற்றைக் கடைப்பிடித்து ஒழுகும் படியாக சந்திர தீப சைவ அறப் பயிற்சி வளாகம் ஒன்று ஆரம்பிக்க வேண்டுமென்று அடியேன் உள்ளத்துக் கொண்ட அவாவை திருவருள் பூர்த்தி செய்துள்ளது பிச்சை எடுத்து சிறு குடிசை ஒன்று அந்தணர்க்கு வேத நெறி பயிற்றவும் திருநீற்றின் ஒரு கூட்டுப் பாட்டுடன் எல்லா மக்களுக்கும் எமது சைவ அறங்களினுடைய விளக்கங்களை அந்தணர்கள் மூலம் தெரிவிக்க இவ்வருடம் பங்குனி உத்தர தினத்தன்று ஆரம்பிக்கப்பட உள்ளது; எல்லோரும் வந்து பங்கு கொண்டு சிறப்பிக்குமாறு வேண்டுகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டணியினர் கோயிலில் கூட்டம் வைப்பது தகாத செயல்! சிவத்தமிழ்ச் செல்வி துர்க்கை அம்மன் கோவிலில் ஒரு ஒலிபெருக்கிப் பொம்மை! கள்ளச் சாத்திரிகளே கோவிலில் கலியாணம் செய்யச் சொல்வார்கள்!

இன்றைய இருள் சூழ்ந்த சைவ உலகில் ஒலி பெருக்கி என்னும் பேயே முன்னனியில் நிற்கிறது. இது அவசியம் தானு? இது உண்மையான சிவ பூசைக்கும் உண்மையான சைவ நெறியை அடையவும் வழி வகுக்கிறதா? என்பதே கேள்வி. ஒலி பெருக்கியும் வாஞெலியும் தொலைக் காட்சியும் உலகை உலேக்கிறது என்ருல் எமதுசைவ நெறி வழுவாமல் வாழ்ந்து வந்த சைவர்களும் இதனை அணுகி கோயில்களில் பிடித்து பொய்யான பண்பற்ற பேச்சுகளையும் காட்சிகளையும் பாட்டுகளையும் போட்டு சிவ பூசைகளையும் புனிதத் தன்மையையும் மக்களின் வழிபாட்டையும் குலேக்க வேண்டுமா?

ஆலயம் என்பது ஆன்மாக்கள் ஒடுங்கி இறைவனில் லயித்து அமைதியாகவோ அல்லது திருமுறைகளை ஒதியோ வழி படும் இடமே ஆகும். இறைவன் தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான் இருக்கிறுன் இது உண்மை. இது உண்மைச் சைர்கள் அறிந்த ஒன்று. எனவே மக்கள் ஆலயத்திற்கு ஏன் போவான்? வீட்டிலிருந்து கொண்டு கும்பிடலாம் தானே என நீங்தள் கேட்கலாம். ஆனுல் வீட்டிலோ அல்லது வேறு அமைதியற்ற இடத்திலோ இருந்து தியானிப்பது என்பது முடியாத காரியமாகும், தியானம் என்பது எண்ணங்களையும் சிந்தனைகளையும் மறந்து மனதை ஒரு நிலைப்படுத்தி இறைவனை எண்ணி சிந்தையை அவன்பால் வைத்து வணங்குதலே ஆகும், இதற்கு நிட்சயமாக ஆலயமே சிறந்த இடமாகும், ஏனெனில் அங்கு ஒரு இடையூறு சத்தமோ இராது என்பதே ஆகும், எனவே இப்படி அமைதியை பேண வேண்டிய இடத்தில் ஒலிபெருக்கியையும் மற்றும் அர்த்த மற்றும் கருவிகளையும் கோவிலில் கொண்டு வந்து பூட்டி இடையூறு செய்வது நல்ல செயலாகுமா? இது நிட்சயமாக ஒரு அழிவுச் செயல் என்றே கூற வேண்டும்.

ஆனுல் இன்று வளர் குவடு என்று சொல்லும் அளவுக்குரிய சிறிய கோவிலானுலும் சரி அல்லது வானளவு உயர்ந்த கோபுரத்தையுடைய கோவிலானுலும் சரி அல்லது 3 அல்லது 4 வரிகள் நீள முடைய பட்டம் பெற்ற சிவ சீலத்தை அறிந்த பெரிய குருக்கள் பூசை செய்யும் கோவிலானுலும் சரி அங்கு திருவிழா அல்லது விஷேச பூசை என்ருல் அங்கு முதல் முதல் ஒப்பாரி வைத்து ஊரையும் கோவிலையும் குழப்புவது பேயைப் போன்ற ஒலி பெருக்கியே ஆகும். இன்று சைவ மக்களை நன்நெறிப் படுத்துகிறேன் சிவ சிந்தனைக்காக பிரசங்கம் செய்கிறேன் என்று சொல்லிலும் விளம்பரத்திலும் செய்து கொண்டு இருக்கும் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி ஒவ்வொரு செவ்வாயும் தெல்லிப்பழை துர்க்கை அம்மன் சந்நிதானத்தில் ஒரு கையில் மைக்குடனும் மறு கையில் அதன் தாங்கியையோ அல்லது வயரையோ பிடித்துக் கொண்டு கொழும்பில் இருந்து வந்த பொப்பிசைச் செல்விகள் நின்றது போல் ஒலிபெருக்கியில் ஒப்பாரி வைக்கிறு, இது மிகவும் மிலேச்சத்தனமான செயலாகும். உதாரணமாக ஒரு அடியவர் கோயிலினுள் வந்து இறைவனிடம் இரங்க எண்ணிஆச்சி தாயே என்று இரு கையையும் கூப்பும் போது பண்டிதையின் ஒலிபெருக்கி மெய்யடியார்களே என்று தொடங்கும், அந்நேரம் அந்த அடியவரின் வழிபாட்டு தொடக்கமே குழப்பப்பட்டு மனதை அலை பாய விட்டு கோவிலுக்கு வந்தும் இறைவனை மனதார கும்பிட முடியாமல் அவதிப்பட்டு ஒலிபெருக்கியின் ஒப்பாரியில் உள்ளத்தை விட்டு இறைவனை வணங்க முடியாமல் அவருள்ளம் அலை பாய்கிறது, இதனுல் அவர் கோவிலுக்கு வந்தும் வந்த பலனை அடைய முடியாதவர் ஆகிருர். செல்வியோ அல்லது மற்ற ஒலிபெருக்கிப் பக்தர்களோ இபபடியான பக்தர்களின் வழிபாட்டை குழப்பி பாவத்திற்கு ஆளாகிருர்கள். இது அவர்களுக்கு விளங்காது, ஏனெனில் இந்தப் பிறப்பில் செய்த தீவினை அடுத்த பிறப்பில் தானே என்பதாம், எனவே இப்படி அடியார்களின் வழிபாட்டையும் ஆலயத்தின் அமைதியையும் குழப்பி சைவத்தின் புனிதத்தையும் கெடுத்து மறு பிறவிக்கு தீவினையை சேர்க்காமல் இறைவனை மெய்யன்போடு வணங்கி நல்வினையே சேர்க்க வேண்டும் என்பதாம்.

மேலும் சில கோவில்களில் ஒலி பெருக்கி பிடிதது விழாவும் யாத்திரைகளும் பட்டமளிப்பும் வீண்தனமான பேச்சு வார்த்தைகளும் நடத்துகிருர்கள். இதைத்தானும் அவர்கள் கடைசி கோவில் வீதிகளிலாவது செய்கிருர்களா? இல்லவே இல்லை கோயில் மண்டபம் என்று கூடப் பாராமல் கோவிலுக்குள் நடத்துகிருர்கள். இது மகா பாவமான செயலாகும், ஏனெனில் மூலஸ்தானத்திற்குள் இருக்கும் இறைவனை மதியாமல் அவன் சிந்தை இன்றி வீண் வார்த்தை பேசுதல் குற்றமாகும், உதாரணமாக 25:2:1981 அன்று அநேகம் படித்த பண்டிதர்களும் பொதுமக்களும் வாழும் சித்தன்கேணியைச் சேர்ந்த கலை நகர் என்னும் ஊரில் உள்ள ஒரு பிரபல்யமான வயிரவர் ஆலயத்தில் கிராமம் தோறும் சுதந்திரம் வேண்டி யாத்திரை செய்து வரும் கூட்டணியினர் ஒலி பெருக்கி பிடித்து கோவில் மண்டபத்திற்குள் நின்று முழக்கித்தள்ளினுர்கள்

இவர்கள் நடத்திய நிகழ்ச்சியை மண்டபத்திற் அல்லாது வெளியிலாவது நடத்தினுர்களா? அது தான் இல்லை. இதை சுதந்திரம் வேண்டி நிற்கும் கூட்டணியினர் அறியவில்லையா? அல்லது அறிந்தும் சுதந்திரத்திற்கும் மனித வாழ்விற்கும் இறைவனையும் கோவிலையும் மதிக்க வேண்டியதில்லைஎன்ற எண்ணமா? அல்லது கருத்தா இவர்கள் முழக்கும் போது முழக்குபவர்கள் மூலஸ்தானத்திற்குள் இருக்கும் இறைவனுக்கு முதுகுப் புறத்தை காட்டிக் கொண்டு நின்ருர்கள் மிகுதிப்பேர் மண்டபத்தில் உள்வாசலில் குந்தி இருந்தார்கள். இது நியாயமா? இறைவனுக்கு எமது முதுகுப் புறத்தைக் காட்டலாமா? கூட்டணியினர்தான் சைவசீலம் தெரியாதவர்கள் என்ருல் சீலம் உணர்ந்த ஊர்மக்கள் தானும் இப்படியான குற்றம் செய்ய தமது கோவிலில் அனுமதிக்கலாமா? இதை இனியாகுதல் சைவமக்கள் நன்கு உணர வேண்டும். இனியாவது சைவ சீலத்திற்கும் நெறிக்கும அமைந்து நடக்க வேண்டும் என மிகத் தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

மேலும் சித்தன்கேணிச் சந்தியில் இருக்கும் மகா கணபதிப் பிள்ளையார் கோவிலிலும் மாலை 7 மணி ஆனம் சில இளைஞர்கள் காரியதரிசி உட்பட கோயில் மண்டபத்தில் இருந்து கொண்டு ஊர்க்கதை தொடக்கம் உலகப் புதினம் வரையும் வீண்வார்த்தைகள் தொடக்கம் வியாக்கியானங்கள் வரையும் பேசுகிருர்கள். இது சைவ நீதிக்குப் புறம்பானது, இது இவர்கள் அறியாத ஒன்ரு? ஆனுல் இக்கோவிலுக்குள் சுவருக்குச் சுவர் பரம் பொருளின் பெரும் புகழைப் பாடிப் பணிதலன்றி வேறொன்றும் பேசற்க என்று எழுதியும் மாட்டப்பட்டும் இருக்கிறது, இவை யாவும் இருந்தும் இவர்கள் வாசித்தும் என்ன பயன்? இதை விளங்கிக் கொள்ளவில்லையா? அல்லது இறைவன் பூட்டிய கதவிற்குள் (மூலஸ்தானத்திற்குள்)இது நாங்கள் வெளிமண்டபத்தில் தானே என்ற அறிவீனமான கருத்தற்ற எண்ணமா? குற்றம் கூறுவது என்னுடையதோ அல்லது சந்திரதீபத்தினுடையதோ நோக்கமல்ல. சைவன் இனியாகுதல் சைவ சீலங்களை உணர்ந்த சிவ நெறிக்குட்பட்ட ஒழுங்கான தர்மத்திற்குக் கட்டுப்பட்ட சைவனுக வாழவேண்டும் என்பதே விருப்பாகும்,

மேலும் சிவநெறியும் சைவ சீலமும் அறிநத சிலர் கூறுவார்கள் கோவிலில் கோபுரம் கட்டி கும்பாபிசேகம் செய்த பின் அக் கோபுரத்தில் மிதித்தல் பாவமாகும் என்று. ஆனுல் இன்று நாம் வணங்கும் கோபுரததில மீது எல்லோரும் எவ்வித கூச்சமுமின்றி ஒலி பெருககி கட்ட ஏறுகிருர்கள். கோபுரத்தின் மேல் வாசல்களை மறைத்து முடிககட்டி தரங் கெட்ட சினிமாப் பாடல்களையெல்லாம் அதில் ஒப்பாரி வைப்பித்து பயனற்ற நீர்க் குமிழி போன்ற சிறு சநதோசததை அடைகிருாகள் இவாகள் வணங்கும் கோபுரத்தையே மிதிக்க அஞ்சாதவர்கள் மருகத்தனமான எந்த செயலையும் இனி செய்ய அஞ்சார்களே என்பதாம்.

மேலும் சில ஐயர்மார் குருக்கள் மாா இன்று ஒலி பெருக்கியை கோவில் கோபுரத்தல் எவ்வளவு உயரததில் கட்ட முடியுமோ அவ்வளவு உயரத்தல் கட்டி அதி கூடிய உச்ச சத்தததில விட்டு இறைவனுக்கு சொல்ல வேண்டிய மநதிரத்தை ஒலி பெருக்கியில் ஈரெட்டு திசையும் கேட்க முக்கி முக்கி கததுகிருர்கள், இது என அவர்களின் விளக்கக் குறைவா? ஏனெனில் மூலஸ்தானத்திற்குள்ளோ அல்லது வேறு இடத்திலோ தனக்கு கிட்ட இருக்கும் இறைவன் திருவுருவத்துக்கு சொல்ல வேண்டிய மநதிரத்தை ஒலிபெருக்கியில் சொல்ல வேண்டிய அவசியமில்லைத் தானே? அல்லது மூலஸ்தானத்திற்குள் இருக்கும் இறைவன மீது நம்பிக்கையற்று இதில் இறைவன் இல்லை அவன் வான் உலகில் தான் இருக்கிறுன் எனவே ஒலி பெருக்கி மூலமாவது தனது மந்திரததை கேட்கப் பணணுவோம் என்ற நோக்கமா? இது எதுவாய் இருப்பினும் இப்படி செய்தல் தவறு என்பதே அடியேனினதும் சைவ நெறி அறிந்தோரினதும் கருத்து. இதை நன்கு விளங்கி இனியாவது குருக்கள் மார் ஒலி பெருக்கியில் அர்த்தமறியாதுமந்திரத்தை அரற்றாமல் இருப்பாராக.

மேலும் இன்று எமது சைவ ஆலங்களில் கலியாணம் செய்வது ஒருவிளையாட்டாக அமைந்துள்ளது, பணம் படைத்த சிலர் தமது செல்வாக்கும் பணத்தையும் போலிப் பெருமையையும் மேம்படுத்த செய்கிருர்கள், இது பிழை என்பதை அவர்கள் உணர முடியாதவாறு அவரது போலிப் புகழ் மறைத்து நிற்கிறது. இதை பார்த்து விட்டு எமது உண்மைச் சைவர்களும் பெண்ணுக்கு செவ்வாய் குற்றம் அல்லது தாலிப் பொருத்தம் இல்லை பதியை கொண்டு போய்விடும் என்று சில நொண்டிச் சாட்டுக்களை சைவமும் சாத்திரமும் அறியாத சில போலிச் சாத்திரிகள் சொல்லிவிட கோயில்களில் கலியாணம் செய்கிருர்கள். இது மிகவும் மிலேச்சரது செயலாகும இல்லையேல் எம்பெருமான் திருஞான சம்பந்தரும தனது கலியாணததை கோயிலில் நடத்தி இருக்கலாம் தானே. அவர் அது பிழை என்று உணர்ந்த படியால் தான் தனது கலியாணம முடிந்த பின்பு தான் மணவாளக் கோலத்துடன் துணைவியும் தொடர சோதியுற புகுந்தார், இதையாவது உதாரணமாகக் கொணடு நாமும நடக்க வேண்டாமா? மேலும் பற்றற்ற பாவியை ஏற்று கொணடு விடு என்று வழிபட வேணடிய ஆலயத்தில் அதன் தூய்மையையும் அமைதியையும கெடுதது சீர்குலைத்து கலியாணம் செய்தல் மிகவும் பாவமான காரியமாகும்.

மற்றும் ஆலயத்தல் அதன் தரை விட்டு ஒரு சிறு ஆசனத்தல் அமர்வது கூட குற்றம் அப்படி இருப்பினும் கலியாணம என்றதும் கோவிலில அளவெட்டியிலோ அல்லது சங்கானையிலோ(ஐயா) பெரிதாக மிகவும் தரமான ஆசனவசதி கொண்ட மணவறைவைதது ஆலயத்திற்குள் இருக்கும் இறைவனின் துருவடிக்குச் சமமாகவும் தெய்வம் என வணங்க வேணடிய அக் கோயில் குருக்களுக்கு மேலாகவும இருந்து கொண்டு கோவிலில் கலியாணம் செய்வது மிக மோசமான செயலாகும்,

மேலும் இன்று எமது நாகரீகம் விரும்பும சில குருக்கள் மார் கோவில்ல் இஞ்சினியர் அல்லது டாக்டர் அல்லது ஏ'யி'ஏ துரை இவர்களது கலியாணம் என்றதும் முன்னுக்கு நின்று நடத்துகிருர்கள், ஏனெனில் இவர்களுக்கு செய்தால் பெரும் பெருமை என்ற எண்ணம் அவர்களுக்கு இனி இந்தக் கோயில் குருக்கள இன்ன பட்டம் உடையவர் இவரின் கலியாணத்தை நடத்தினுர் என்று படமும் போட்டு பேப்பரில் போடுவார்கள் என்ற நம்பிக்கை இந்த போலிக் கவுரவமே இன்று சைவனையும் சைவ உலகினையும் கீழ்நோக்கி கொண்டு போகிறது என்ருல் அதை யாரும் மறுக்க முடியாது. கலியாணம் நடத்த மண்டபமும் ஆதீனமும் கட்டிக் கொண்டு தம்பிரான் தவிக்கிருர் இவர்கள் அங்கு போய் நடத்தலாம தானே. அவர் வெளி நாடு போய் வந்தவர் அங்கு நடத்தினுல் இரு சாராருக்கும் பெருமை. எனவே சைவ மக்களே இனியாகுதல் தவறை உணர்ந்து உண்மைச் சைவர்களாக வாழ வேண்டும் என்பதே அடியேனின் ஆத்ம விருப்பு.

பா. அருமருகன்
பன்னைமூலை
சித்தன்கேணி

## இப் பத்திரிகை பற்றிய தகவல்

இப் பத்திரிகை கொக்குவில் மேற்கு ஆனைக்கோட்டை வீதியில் வசிக்கும் திரு .வை. நல்லையா அவர்களால் தமது சந்திரதீப தவநெறி வளாகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 3 3 1981 ஆகும் தொடர்புகட்கு
ஆசிரியர்
சந்திர தீபம்
கொக்குவில் என் விண்ணப்பித்து பெற்றுக் கொள்ளலாம்,
வருட சந்தா ரூபா 40

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org